# தளிர்

கார்த்திகை—மார்கழி: 1985

விலை ரூபா: 4.00



குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# தளிர்

திரள்: 3 இல: 8, 9

கார்த்திகை—மார்கழி: 1985

விலை ரூபா: 4.00


## உள்ளே


❋ இன அழிப்பு தொடரின் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த ஐ. நா படை வருமா?

❋ தமிழீழப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம்

❋ புலம் பெயரும் பறவைகளும் புதிய சில சிந்தனையும்

❋ தேசமெனும் தகைமை ஐதீகங்களும் யதார்த்தங்களும்

❋ தமிழீழப் பகுதிகளில் நீர்வளம்

❋ நவகாலனித்துவம் - 4

❋ மரணம் கொடிது! மரணம் கொடிது! அதனிலும் கொடிது உனது மரணம்!

❋ இவன் எங்கள் நண்பன்!

❋ பெண் விடுதலையும் கலாச்சாரமும்

❋ சன்டினச புரட்சி — நிக்கரகுவா


## தொடர்புகட்கு


"தளிர்"

ஆசிரியர் குழு

யாழ்-பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்


## வாசகர்களுக்கு

தளிர் பற்றிய கருத்துக்களையும் உள்நாட்டு வெளிநாட்டு அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் பற்றிய ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

## நம்பிக்கையினை உறுதியாக்குவோம்

எமது போராட்டத்தினை ஒடுக்குவதற்கு, மக்களை படுகொலை செய்வதனூடாக போராட்டத்தில் நம்பிக்கையிழக்கச் செய்து போராட்டத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்துவதற்கான தனது முயற்சிகளை ஸ்ரீலங்கா அரசு அண்மையில் புதிய முறைகளைக் கையாண்டு தீவிரமாக்கியுள்ளது. கிழக்கு மாகாணங்களில் மக்கள் போர்நிறுத்த காலத்தில் பெருந்தொகையில் படுகொலை செய்யப்பட்டமை, வடக்குப் பகுதிகளில் ஹெலிசப்டர்கள் மூலமும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியும் மக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற நிகழ்வுகள் இதனை வெளிப்படுத்துகின்றன.

ஆனால் போராளிகளினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட பதிலடிகளினால் ஸ்ரீலங்கா அரசினால் தனது திட்டத்தினை முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் போயிற்று போராளிகளுக்கும் இராணுவத்திற்குமான நேரடி மோதலில் பல தடவைகள் இராணுவம் பின் வாங்கியமை, இராணுவ ரீதியில் போராட்டத்தில் மக்களின் நம்பிக்கையினை உறுதியாக்கியுள்ளது.

போராட்டத்தில் மக்களின் நம்பிக்கை வலுப்பட்ட இவ்வேளையில் அரசியல் ரீதியாக போராட்டத்தை ஒழுங்காக நெறிப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு உள்ளது. எமது போராட்டத்தின் இலக்கு தேசிய விடுதலையுடன் இணைந்த ஒரு சமூக விடுதலையே. தேசிய விடுதலைப் போராட்டம் ஒழுங்காக நெறிப்படுத்தப்படும் போதே சமூக மாற்றத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட முடியும்.

போராளிகள் மக்களுடன் இணைந்து கொள்வதனூடாக மக்களுக்கும் போராளிகளுக்குமிடையே உள்ள இடைவெளியினை நீக்கிக் கொள்ளவேண்டும். முஸ்லீம் மக்களையும், மலையக மக்களையும் விஞ்ஞான பூர்வமான தீர்வுகளினூடாக ஒருங்கிணைத்து தமிழ் பேசும் மக்களிடையேயான ஐக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். விடுதலை இயக்கத்தினர் இவற்றை உணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகிறோம்.


க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

## ஸ்ரீமாவோவுக்கு குடியுரிமை

இலங்கையின் இனப் பிரச்சினையினை ரொமேஷ் பண்டாரி கையாள ஆரம்பித்த வுடன் இது குறித்த இந்தியாவின் தந்தி ரோபாயமாக இலங்கையுடன் ஒத்துழைத்து நடப்பதனூடாக இலங்கையினை பணியவைத் தல் என்பது அமைந்துவிட்டது. அதாவது இலங்கையுடன் ஒத்துழைத்து சிநேகபூர்வான முறையில் சுமுகமாகப் பிரச்சினைகளை அணு குவதன் ஊடாக ஒரு அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசை உடன் பட வைத்தல் என்பதே இத் தந்திரோபாய மாகும். இதன் அடிப்படையில் 'இலங்கை அரசுடன் ஒத்துழைத்தல்' என்பதன் வெளிப்பாடே பாலசிங்கம், சந்திரகாசன், சத்தியேந்திரா ஆகியோரின் நாடுகடத்தல் உத்தரவாகும்.

ஆனால் இச் சுமுகமான அணுகுமுறை இலங்கை அரசைப் பொறுத்தவரை பல னளிக்கவில்லை. இலங்கையின் இனப்பிரச் சினை குறித்து பிரிவினையில்லாமல் அரசியல் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடும் நிலை மைகளில் இந்தியா பலவீனமாக இருப்ப தனை உணர்ந்து கொண்ட இலங்கை அரசு காலத்தைத் தாழ்த்துவதனூடாக தமிழர்க ளின் போராட்டத்தை தன்னியல்பாகச் சீர ழிய வைத்து இனப் பிரச்சினையினை இரா ணுவத் தீர்வினூடாக முடிவுக்குக் கொண்டு வருவதனை தனது முடிவாகக் கொண்டுள் ளது. அண்மையில் பாகிஸ்தான் ஜனாதி பதி 'ஷியா' வின் வருகையும் அவர் இங்கு விடுக்க "இலங்கை பிளவு படுவதனை பாகிஸ்தான் அனுமதிக்க மாட்டாது" எனும் அறிக்கையும் இந்தியாவின் சுமுக மான அணுகுமுறை தோல்வியடைந்து விட் டது என்பதனை உறுதி செய்கின்றன.

இலங்கையுடனான சுமுகமான அணுகு முறை தோல்வியடைந்ததால் இந்தியாவா னது தனது தந்திரோபாயத்தை மாற்றி யமைத்துள்ளது. இலங்கையினை பல வழிக ளிலும் மிரட்டி பணியவைக்கும் முயற்சி களை இந்தியா ஆரம்பித்துள்ளது. "இலங் கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு இந்தியாவிலுள்ள அகதிகள் மீண்டும் இலங்கைக்குச் செல்லும் வரை இந்தியா திரும்பவுள்ள 93,000 இந்தியர் களையும் இந்தியா ஏற்றுக்கொள்ளாது" என்ற இந்தியப்பிரதமர் ராஜீவின் அறி க்கை இந்தியாவின் புதிய தந்திரோபா யத்தின் முதற்படி நடவடிக்கையாகும். இந் தியாவின் அணுகுமுறையின் மாற்றத்தை உணர்ந்து கொண்ட JR இந்தியாவைச் சாந்தப் படுத்துவதற்காக இந்தியாவின் நீண்ட நாட்கோரிக்கையான ஸ்ரீமாவோ வுக்கு குடியுரிமை வழங்குதல் என்பதனை நிறைவேற்றியுள்ளார். ஆனால் இதன் பின் னணியில் இரண்டு அம்சங்களைக் கருத்திலெ டுத்தே J.R இதனைச் செய்துள்ளார்.

ஸ்ரீ மாவோவுக்கு குடியுரிமையினை வழங் குவதனூடாக U.N.P யினுள் ஒன்றுமை யினைப் பலப்படுத்த முடியுமென்பதும், U.N.P பாராளமன்ற உறுப்பினர்களை தன் னுல் இலகுவாகக் கையாளக் கூடியதாக இருக்குமென்பதுவும் முதலாவதாகும். குடி யுரிமை வழங்கப்பட்டதன் நோக்கம் பாரா ளமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றினை வைப்பதே எனும் எண்ணம் U.N.P பா.உ களுக்கு ஏற்படும் பட்சத்தில் தங்களது பதவிகளை காப்பாற்றுமுகமாக பொதுத் தேர்தலை தவிர்ப்பதனை அவர்கள் விரும்புவார்களாகையால் J.R யைப் பொறுத்தவரையில் அவர்களைக் கையாழு வது இலகுவாகும்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் இந்தியாவின் முயற்சிக்கு U.N.P அரசு ஒத்துழைக்காவிடில் அரசியல் காய் நகர்த்தும் முயற்சியில் இந்தியா இறங்க லாம். இதன்படி U.N.P அரசு பதவியிறக் கப்பட்டு (இந்தியா முயன்றால் பொருளியல் நெருக்கடி ஏற்படுத்துவதனூடாக இதனை மேற்கொள்ளுவது சாத்தியமானதே) ஸ்ரீ மாவோ தலைமையிலான S.L.F.P ஆட் சிப் பீடம் ஏறும் போது எதிர்க்கட்சி பலவீனமாக இருக்குமாகையால் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு சாதகமான நிலைமைகள் உருவாகும் என இந்தியா எண்ணுவதற்கான வாய்ப்புகள் உள்ளமையினை உணர்ந்த J.R, ஸ்ரீமாவோ வுக்கு குடியுரிமை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினையினை தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தைகளில் ஸ்ரீமாவோவினையும் கலந்து

(தொடர்ச்சி 38-ம் பக்கம் பார்க்க)

# இன அழிப்பு தொடரின் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த ஐ. நா. படை வருமா?

— அரவிந் —

பல முனைகளிலும் கூர்மையடைந்து வந்த தமிழீழ விடுதலைப் போராட்டமானது இடையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தினூடாக ஒரு தற்காலிகத் தேக்க நிலையை அடைந்துள்ளது. இச் சூழ்நிலையில் போராட்டத்தை ஒழுங்கான முறையில் முன்னேற்றிச் செல்வதற்கு, எமது போராட்டமானது ஸ்ரீலங்கா அரசினாலும் இந்திய அரசினாலும் எவ்வாறு கையாளப்படப் போகின்றது என்பது பற்றிய முன்னுணர்தல் அவசியமானதாகும். இச்சந்தர்ப்பத்தில் இவை பற்றிய விஞ்ஞான பூர்வமான ஒரு பார்வையை முன்வைத்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எமது போராட்டத்தை ஸ்ரீலங்கா அரசு எவ்வாறு கையாளப்போகின்றது. என்பதனை ஆய்வு செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசின் தலைவரான J. R. ஜெயவர்த்தனா பற்றிய சரியான கணிப்பீட்டை நாம் மேற்கொள்ளல் அவசியமானது. J. R. ஜெயவர்த்தனா 45 வருடகால தொடர்ச்சியான அரசியல் அனுபவம் உடையவர். அவர் எக்கால கட்டத்திலும் அரசியலில் இருந்து ஒதுங்கியதில்லை. ஆரம்பத்தில் இருந்தே அரசியலில் மூக்கிய ஆலோசகராகப் பணியாற்றியவர். குறிப்பாக D.S. சேனநாயக்காவின் அரசில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தை அமைச்சராகச் சேர்க்க வேண்டுமென்ற ஆலோசனையினையும், (அக்கால கட்டத்தில் வளர்ச்சியடைந்து வந்த இடதுசாரிகளை எதிர்வாதத்தால் வெற்றிகொள்ளக் கூடியவர் ஜீ.ஜீ. என்பதே J.R இன் கணிப்பீடாகும்.) 1956இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் வைக்கப்பட்டால் U.N.P. தோல்வியடையும் என விடுத்த எச்சரிக்கையினையும், சிங்களம் மட்டும் என்பதே U N.P. இன் கொள்கையாக வேண்டுமென (55 இல்) வழங்கப்பட்ட இறுதி ஆலோசனையினையும் வழங்கியவர் இவரே. 1944இல் U.N.P ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒரே கட்சியில் இருந்து அக்கட்சியின் சூத்திரதாரியாக விளங்கியவர். டட்லி சேனநாயக்காவின் ஆட்சியில் பின்னணியில் இருந்து தீர்மானத்தை நிறைவேற்றும் செயல்பூர்வமான தலைவராக இருந்தவர். சுருக்கமாகக் கூறின் D.S. சேனநாயக்காவின் பின்னர் U N.Pயை வழி நடத்தியவர். [கொத்தலாவலையின் ஆட்சிக்காலத்தில் J Rஇனது ஆலோசனைகள் சில நிராகரிக்கப்பட்டன.]

1977இன் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சின்னாபின்னப்படுத்தியவர் மாக்சிய இடது சாரிகளை அரசியலில் இருந்து முழுமையாக ஒதுக்கியவர். தொண்டமானை தன்னோடு இணைத்துக் கொண்டதனூடாகவும், கிழக்குமாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான இராசதுரை, கனகரத்தினம் போன்றோரை தனது பக்கம் ஈர்த்துக்கொண்டதனூடாகவும் கூட்டணியினைப் பிளவுபடுத்தியவர். இவ்வாறாக தனது ஆளுமையினூடாகவும் இராஜதந்திரத்தினூடாகவும் தனது அரசியல் எதிரிகளை வெற்றிகொண்டவர். சுருங்கக்கூறின் ஒரு கைதேர்ந்த இராஜதந்திரியினால் சிங்கள பௌத்தம் தலைமை தாங்கப்படுகின்றது

J. R. ஜெயவர்த்தனாவின் இராஜதந்திரம் யாவும் தோல்வியடைந்து அவரினால் கையாள முடியாத அளவிற்கு தார்க்கரீதியான வளர்ச்சியை இலங்கையின் இனப்பிரச்சினை அடைந்துள்ளது. ஆனால் இன்று வரை எமது போராட்டத்தை கையாள முடிவதற்கு இரு சாதகமான சூழ்நிலைகள் J.Rக்கு காணப்படுகின்றன

(1) சர்வதேச உறவுநிலையில் உள்ள நீக்கல்கள்.



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

2) எமது போராட்ட ஒழுங்கமைப்பில் உள்ள சில குறைபாடுகள் அல்லது ஓட்டைகள்.

இன்று சர்வதேச உறவு நிலையானது நெகிழ்ச்சித் தன்மை உள்ளதாகக் காணப்படுகின்றது. இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்தில் 'வோர்சோ' (Warso) அணியின் பக்கம் உறுதியாகச் சார்ந்திருந்த இந்தியா தற்பொழுது நேட்டோ (Nato) அணியுடனும் தனது தொடர்புகளை அதிகரித்து வருகின்றது. இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையிலான சர்வதேச உறவுகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இவ்வாறாக சர்வதேச உறவுகளில் காணப்படுகின்ற நெகிழ்ச்சித் தன்மையினை J. R. தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகிறார். இங்கு போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை போன்றவை இடம்பெற்றதில் சர்வதேச உறவு நிலையில் உள்ள நெகிழ்ச்சித்தன்மையின் பங்கு கணிசமானது.

இச் சூழ் நிலையில் J. R இன் அரசியல் ஆளுமையானது ஒன்றுக்கொன்று முரணாகப் பேசுவதாகவே அமைந்துள்ளது. சில சமயங்களில் தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டெனவும் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானது எனக்கூறும் அதேவேளை சில சந்தர்ப்பங்களில் தமிழர்கள் என்ன கோருகின்றார்கள் என்பதே புரியவில்லை. உரிமைக்காகப் போராடும் ''பயங்கரவாதிகளை'' பூண்டோடு அழிப்பதைத்தவிர வேறு வழியில்லையெனவும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இதேபோல் இந்தியாவிற்கு சாதகமான கருத்துக்களையும் பாதகமான கருத்துக்களையும் ஒரேகாலகட்டத்திலேயே வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். ஸ்ரீலங்கா இராணுவம் மிகவும் ஒழுக்கக்கேடான இராணுவமென்று சில சந்தர்ப்பங்களில் கூறிய J. R வேறு சில சந்தர்ப்பங்களில் தமது சகாக்களின் சிதைந்த உடல்களை பார்க்கும் போது உணர்ச்சிவசப்படுகின்ற இராணுவ வீரர்கள் கொதிப்படைந்து கட்டுப்பாடுகளை மீறி விடுகின்றனர் என இராணுவத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவகையில் கருத்து வெளியிட்டுள்ளார். இதனூடாக தன்னை விளங்கிக் கொள்ள முடியாத புதிர்த் தன்மை உடையவராகவும் குழப்பம் மிகுந்தவராகவும் வெளிப்படுத்திக் கொள்கிறார். இவற்றைப் பார்த்து J. R ஜெயவர்த்தன குழம்பிப்போய் இருக்கிறார் எனும் முடிவுக்கு வருவோமானால் நாம் தவறிழைத்தவர்கள் ஆகிறோம். J. R ஜெயவர்த்தன திட்டமிட்டே இவ்வாறு நடந்து கொள்கிறார். இவ்வாறு குழப்பம் மிகுந்தவராகத் தம்மை வெளிப்படுத்திக்கொள்வதனூடாக பல முனைகளிலும் இலகுவில் இவரால் தப்பித்துக் கொள்ள முடிகிறது. ஆனால் எமது போராட்டம் குறித்து J. R. திட்டவட்டமான முடிவினைக் கொண்டுள்ளார். எமது போரட்டத்தை அழித்து விடுவது என்பதே அம் முடிவாகும்.

எமது போராட்டத்தை அழித்து விடுவதென்ற தனது முடிவைச் செயற்படுத்த பிராந்திய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அரசியல் வேலைகளிலும் உள்நாட்டு ரீதியில் இராணுவ நடவடிக்கைகளிலும் J. R ஈடுபட்டுள்ளார் ஸ்ரீலங்கா அரசிற்கு பக்க பலமாக உள்ள அமெரிக்கா. இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வினைக் காணுமாறும் இவ்வாறு அரசியல் தீர்வுகாணப்படும் பட்சத்தில் எஞ்சியுள்ள 'பயங்கரவாதத்தை' அழிக்க தான உதவிவழங்குவதாகவும் கூறியுள்ளமை ஒரு அரசியல் தீர்வின் அவசியத்தை ஸ்ரீலங்கா அரசிற்கு உணர்ததியுள்ளது எனவே சிறு எலும்புத் துண்டான மாகாண சபையின் மூலம் எமது போராட்டத்தை அழித்து விடுவதற்கான நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

தனது அரசு அரசியல் தீர்வுக்கு தயாராக இருப்பதாக சர்வதேச ரீதியில் வெளிப்படுத்திக் கொள்வதில் J. R. கவனம் செலுத்துகின்றார். தனது முக்கிய அமைச்சர்களான பிரேமதாசா, காமினி திசாநாயக்கா, ரோனி டி மெல், லலித் அத்துலத்முதலி ஆகியோரை அரசியல் தீர்ப்பின் அவசியம் குறித்து கருத்து வெளியிட வைத்துள்ளார். அண்மைக் காலங்களில் இந்தயாவுக்கு எதிரான கருத்துக்கள் அமைச்சர்களால் பேசப்படாமை இங்கு கவனிககத்தக்கது. தனது அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு ஏனைய சில சக்திகள் தடையாக இருக்கின்றன. என வெளிப்படுத்திக் கொள்வதனூடாக மேற்குலகினதும். ராஜீவ் நிர்வா

கத்தினதும் அநுதாபத்திற்குரியவராக தன்னை வைத்துக்கொள்வதில் ஓரளவு வெற்றி பெற்று வருகிறூர் மேலும் இங்கு நடப்பது உரிமைப் போராட்டமல்ல, பயங்கரவாதமே என்ற வகையில் பிரச்சாரங்களை ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது. இவற்றினூடாக சர்வதேச அரசியலை தனக்கு சார்பாக ஒழுங்கமைக்கும் வேலைகளில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

உள்நாட்டு ரீதியில் இராணுவ நடவ நடவடிக்கைகளினூடாக போராட்டத்தை சிதைத்து விடுவதில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. குடாநாட்டுக்கு வெளியே இராணுவ நடவடிக்கைகளினூடாக மனிதரற்ற பிரதேசத்தை (No Man Territory) உருவாக்குவது J. R இன் திட்டங்களில் முக்கியமானதாகும். பல்லின மக்கள் வாழும் பிரதேசங்களில் மனிதரற்ற பிரதேசத்தை உருவாக்குவது பெரும்பான்மையினருக்கு தீங்காக அமைய மாட்டாது. மாறுக சிறுபான்மையினருக்கே தீங்காக அமையும் இதனூடாக சிறுபான்மை மக்களின் நிலப்பரப்பு சுருக்கப்படுவதோடு அகதிகளாக்கப்பட்ட மக்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பும் சிறுபான்மை மக்கள் மீது சுமத்தப்படுகிறது. இது மட்டுமன்றி மனிதரற்ற பிரதேசபானது ஒரு யுத்த தடுப்பு வலயமாகப் பயன்படுத்தப்படலாம்.

பல்லின மக்கள் வாழும் பகுதிகளில் முஸ்லீம் மக்களை வெற்றி கொள்வதனூடாக தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையே பிரச்சினைகளை உருவாக்கி பிளவுகளை ஏற்படுத்தல் J. R இன் இன்னொரு திட்டமாகும். இவற்றினூடாக தமிழ் பேசும் மக்களிடையான ஒருமைப்பாட்டையும் பிரதேச ஒருமை பாட்டையும் அழித்துவிடுவது என்ற தனது நோக்கத்தை அடைந்து கொள்வதில் J. R. கவனம் செலுத்துகிறூர். சுருங்கக் கூறின் சமாதானம் பேசியே எமது போராட்டத்தை அழித்து விடுவதற்கான நடவடிக்கைகளில் J. R. இறங்கியுள்ளார். முன்னெரு பேட்டியில் J. R. தன்னைப் பற்றிக் கூறும் போது தான் ஒரு குத்துச் சண்டை வீரர் எனவும் முகத்திற்கு குறிவைத்து வயிற்றில் குத்துபவர் எனவும் கூறியிருந்தார். அவரது அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிலும் இதுமிகவும் பொருத்தமானதாகும். இதனை உணர்ந்து செயற்பட வேண்டிய அவசியம் எமக்கு உள்ளது.

எமது போராட்டமானது இந்திய அரசால் எவ்வாறு கையாளப்படப் போகிறது என்பதனை ஆய்வுசெய்வதற்கு எமது பிரச்சனை குறித்த இந்திய அரசின் மூலோபாயம், தந்திரோபாயும் என்பவற்றை விளங்கிக்கொள்ளல் அவசியமானது. இங்கு மூலோபாயம் என்பதே அடிப்படையானது மூலோபாயத்தினை அடைந்து கொளவதற்காக சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தப்படும் முறையே தந்திரோபாயமாகும் இது நிலையற்றது. சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப மாறுபடக்கூடியது.

எமது பிரச்சினை குறித்து இந்திய அரசின் மூலோபாயமானது பின்வருமாறு அமைந்துள்ளது, இலங்கையினை ஒரே நாடாகப் பேணும் அதேவேளை இங்கு தமிழ் இனம் அழிக்கப்படாமல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் மூலோபாயமாகும்.

இலங்கையில் ஒரு தனிநாடு உருவாகுவதை இருகாரணங்களால் இந்தியா விரும்பவில்லை.

1) இலங்கைத் தீவில் தமிழ்ஈழம் ஸ்ரீலங்கா எனும் இருநாடுகள் அமையுமாளுல்ஸ்ரீலங்கா எனும் பெரியநாடு நிரந்தர இந்தியா எதிர்ப்பு நாடாக அமைந்துவிடும். இந்தியாவின் தென்பகுதியில் ஒருநிரந்பர எதிர்ப்பு நாடு உருவாகுவதை இந்தியா விரும்பவில்லை.

(2) இங்கு அமைக்கப்படும் தமிழ் ஈழம் சமதர்ம தமிழீழமாக அமையும் பட்சத்தில் இங்கு ஏற்படும் சுபீட்சமான மாற்றங்களின் தாக்கம் தமிழ் நாட்டையும் பாதித்து விடும் சந்தர்ப்பங்களில் அங்கேயும் சமுதாய மாற்றத்திற்கான போராட்டம் வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளமையும் அப்போராட்டத்திற்கு தமிழீழம் தனிப்பிராந்தியமாக அமையக்கூடும் என்ற அச்சம் இந்திய அரசிற்கு உள்ளமையும் இரண்டாவது

காரணமாகும். இதுமட்டுமன்றி தென்னாசியப் பிராந்தியத்தில் சோசலிசத்தின் திறவுகோலாக தமிழீழம் அமைந்துவிடும் என்ற அச்சமும் தமிழ் ஈழம் உருவாகுவதை இந்தியா விரும்பாமைக்கு காரணமாக அமைகின்றது.

அதேவேளை இங்கு தமிழ் இனம் அழிக்கப்படாமல் முக்கியத்துவம் வாய்ந்த இனமாகப் பேணப்பட வேண்டியது இந்தியாவின் நலனைப்பொறுத்தவரை அவசியமானதாகும். இலங்கை இந்தியாவின் நலனுக்குப் பாதகமான சக்திகளை உள்வாங்கிக் கொள்ளக் கூடாது என்பதில் இந்தியா மிதந்த அக்கறை செலுத்துகின்றது. இலங்கை இதனை மீறும்போது இலங்கையினை அடிபணிய வைப்பதற்கு தமிழர்களின் பிரச்சினையினை இந்தியா பயன்படுத்தி வந்திருக்கிறது. இலங்கையில் உள்ள தமிழ் இனம் அழிக்கப்பட்டு முக்கியத்துவமற்ற ஒரு சிறிய பகுதி மக்களாக தமிழர்கள் ஆக்கப்பட்டால் தமிழர்களின் பிரச்சினையினைப் பயன்படுத்தி இலங்கையினை கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் நடை முறை வலிமையற்றதாகி விடும். இது மட்டுமன்றி தொடர்ச்சியாக தமிழர்கள் அழிக்கப்பட்டால் இந்தியா உள்நாட்டு ரீதியான நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டி வரும் எனவே தமிழ் மக்கள் அழிக்கப்படுவதனை இந்தியா நீண்ட காலத்திற்கு அனுமதிக்கமாட்டாது. இன்னொரு வகையில் கூறின் இலங்கையில் தமிழ் மக்களை முழுமையாத் தோற்கடிக்கப்படுவதை இந்தியா அனுமதிக்கமாட்டாது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சமரசத் தீர்வு காண்பதில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசு முன்வைக்கும் மாகாண சபைத் திட்டத்தினை தமிழ்ப் போராளிகள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் மாநில சபைத் திட்டத்தினூடாக சமரசத்தினை ஏற்படுத்த இந்தியா முயல்கிறது. இதற்கமைய ஸ்ரீலங்கா அரசினையும் தமிழ்ப் போராளிகளையும் தனக்குச் சார்பாகக் கையாள்வதற்காக பல தந்திரோபாயங்களை நிலமைகளுக்கேற்றவாறு இந்தியா பயன்படுத்துகின்றது. ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் இந்தியாவின் கருத்தோட்டத்திற்குப் பாதகமாக அமையும் சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்கா அரசிற்கு எதிரான கருத்தையும் தமிழ்ப் போராளிகள் இந்தியாவை மீறி செயற்பட முனைகையில் போராளிகளுக்கு எதிரான கருத்தையும் வெளிப்படுத்துவது இத் தந்திரோபாயங்களின் ஓர் அங்கமாகும். சமரசத் தீர்விற்கான அடிப்படையினை அமைக்கும் நோக்கில் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்குகொண்டுவரப்பட்டதில் இந்தியாவின் பங்களிப்பு கணிசமானது. ஆனால் இப்போர்நிறுத்தமானது உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பது இந்தியாவைப் பொறுத்த வரையில் அவசியமானது.

ஆனால் இவ்விடயத்தைப் பொறுத்த வரை ஸ்ரீ லங்கா அரசு இந்திய அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. போர் நிறுத்தக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் இராணுவத்தினால் கொன்றொழிக்கப்பட்டு வருகிறார்கள். இது தமிழர்கள் அழிக்கப்படாது முக்கியத்துவம் வாய்ந்த இனமாகப் பேணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் மூலோபாயத்தைப் பாதிப்பதானால் இதனை ஒரு எல்லைக்குமேல் இந்தியா அனுமதிக்க மாட்டாது.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களை படுகொலை செய்வதனை நிறுத்தா விடில் இந்தியாவானது படு கொலைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடு பட வேண்டிய தேவை உள்ளது ஸ்ரீலங்கா அரசானது தொடர்ச்சியாக இனப்படு கொலையில் ஈடுபடுமானால் இதற்கு எதிரான நடவடிக்கைளின் முதற் கட்டமாக ஸ்ரீலங்கா மீது பொருளாதாரத்தடைகளை விதிக்கும் நடவடிக்கைளில் இந்தியா ஈடுபடலாம். தனது பொருட்களுக்கான விலையினை உலகச்சந்தையில் குறைப்பதன் மூலம் (உ+ம் தேயிலை) இலங்கையினை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்குவதனூடாகவோ அல்லது இலங்கையினை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தி வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கும் நிதி உதவிகளை நிறுத்துவதனூடாகவோ இப் பொருளாதாரத்தடை மேற்கொள்ளப்படலாம்.

பொருளாதாரத் தடை விதிப்பதனூடாக இலங்கையினை பணிய வைக்கும் முய

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழப் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம்

-பார்த்திபன்-

சென்ற இதழ்த் தொடர்ச்சி

## பசுமைப் புரட்சிக்கான தடைகள்

நவீன விவசாய அபிவிருத்திக்குத் தடையாக அமைகின்ற மிகப் பிரதான மான காரணி சிறிய காணித்துண்டுகளில் பயிரிடுதல் என்பதாகும். ஒரு கணிப்பீட்டின்படி தமிழீழத்தில் 2,63,400 பேர் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் மொத்தம் 5,23,970 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளனர். எனவே சராசரியாக ஒருவர் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தியை மேற்கொள்கின்றனர். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் 2,63,400 பேரில் 2,40,820பேர் சொந்த நிலமுடையவர்களாக உள்ளனர். ஆனல் இவர்களில் 1,03 770 பேர் அதாவது 43%இனர் வீட்டுத்தோட்டம் மட்டுமே உடையவர்களாக உள்ளனர். இங்கு வீட்டுத்தோட்டம் என்பது 20 பேர்ச்சஸ் அல்லது அதற்கும் குறைந்த நிலப்பரப்பினை உடையதாகும் மேலும் வீட்டு நுகர்விற்காக பெரும்பாலும் உற்பத்தி செய்வதே வீட்டுத்தோட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைககு உட்படுத்தப்படும் நிலப்பரப்பு 41210 ஏக்கர்களாகும். எனவே வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் சராசரியாக 0.4 ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பிலேயே உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாருன சிறு நிலத்துண்டுப் பயிர்ச்செய்கையே தமிழீழத்தில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுவதற்குப் பிரதான தடையாக உள்ளது.

சிறுநிலத்துண்டு காரணமாக சந்தைப்படுத்தக்கூடிய மிகை உற்பத்தி இருக்கமாட்டாது. எனவே விவசாயியின் வருமானம் மிகவும் குறைந்தபட்டத்திலேயே இருக்கும். இதனல் அவன் தனது பிழைப்பு மட்டத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பான். இதன் காரணமாக பசுமைப்புட்சி ஒன்றினை ஏற்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில் நுட்ப முறைகளை மேற்கொள்வதற்கு அவனிடம் போதியளவு பணமில்லை. மேலும் விவசாயத்துறையில் பயன்படுத்தக்கூடிய நவீன தொழில்நுட்பமுறைகள் செலவு கூடியவை மட்டுமல்ல ஆபத்துக்கள் நிறைந்தவையுமாகும். வருமானம் குறைவாக இருக்கும் நிலையில் விவசாயிகள் இவ் ஆபத்துகளை எதிர்நோக்க விரும்பமாட்டார்கள். இதனல் அவர்கள் தமக்கு நன்கு பரிச்சயமான நீண்ட காலமாக தாம உற்பத்திக்குப் பயன்படுத்திக்கொண்டு வருகின்ற குறைந்த உற்பத்தியையே தரக்கூடிய பழைய உற்பத்தி முறைகளையே பயன்படுத்துகின்றனர். இதனல் நீண்டகாலமாகவே எமது விவசாய உற்பத்திமுறையில் பெரும் அளவு மாற்றங்கள் ஏற்படவில்லை. மேலும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் காணித்துண்டுகள் சிறியனவாக இருப்பதனல் பிழைப்புமட்ட வருமானத்தைககூடப் பெற முடியாமலிருக்கும் போது விவசாயிகள் கடன்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனல் விவசாயிகள் வியாபாரிகளுககும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் கடமைப்படுகின்றனர். இக் கடமைப்பாடு காரணமாக தமது உற்பத்தியை குறைந்த விலைகளிலேயே விற்கவேண்டியுள்ளது. எனவே உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளுக்கான விலைகள் என்ற வகையில் வியாபாரிகளிடமும் கடனுக்கான வட்டி என்ற வகையில் கடன் கொடுப்பவர்களிடமும் விவசாயிகள் தமது உற்பத்தியில் பெரும் பகுதியினை இழந்துவிடுகின்றனர். இவ்வாருன பிரச்சினைகள் அனைத்திற்கும் அடிப்படைக்காரணம் சிறு நிலத்துண்டுகளே



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

ஆகும். எனவே தமிழீழத்தில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் சிறு நிலத்துண்டுகளை இணைத்து விவசாயப் பண்ணைகளை உருவாக்கவேண்டியது அவசியமாகும்.

உயர்ந்த விளைச்சலைத் தரக்கூடிய விதைகள் புதிய தொழில் நுட்ப முறைகள் என்பவற்றின் ஊடாகவே ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தமுடியும். விவசாயிகள் நவீன உற்பத்தி முறைகளை பயனபடுத்தாமலிருப்பதற்கு அல்லது மிகவும் குறைந்தளவில் பயன்படுத்துவதற்கு பின்வருவனவற்றைக் காரணமாகக் காட்டலாம்.

1. இவை பற்றிய போதிய அறிவின்மை
2. நவீன தொழில் நுட்ப முறைகள் போதியளவு கிடைக்காமை
3. நவீன தொழில் நுட்ப முறைகள் உள்ளடக்கியிருக்கும் உயர்ந்த செலவுகள்

இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் பின்வரும் வழிகளை மேற்கொள்ளமுடியும். முதலில் எமது மண்வளம், காலநிலை என்பவற்றின் அடிப்படையில் உயர்ந்த விளைச்சலைத் தரக்கூடிய பொருத்தமான விதைகளைக் கண்டுபிடித்தல் அவசியம். அடுத்து எமது விவசாய அமைப்புக்கு பொருத்தமான உற்பத்தி முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். உதாரணமாக நான்கு சில்லு உழவு யந்திரத்திலும் பார்க்க இரண்டு சில்லு உழவு யந்திரம் எமக்குப் பொருத்தமானதாகும். ஏனெனில் இதன் மூலம் நவீன தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துகின்ற அதே நேரத்தில் பற்றாக்குறையாக உள்ள மூலதனத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடியதாகவுமிருக்கும். ஒரு கணக்கெடுப்பின்படி தமிழீழத்தில் மொத்தம் 5690 நான்கு சில்லு உழவு யந்திரங்களும் 5510 இரண்டு சில்லு உழவு யந்திரங்களும் உண்டு. மேலும் தமிழீழத்தில் காணப்படும் 2,63,300 நில உடமைகளுள் 81380 நில உடமைகள் மட்டுமே நான்கு சில்லு உழவு யந்திரங்களைப் பயன்படுத்துகின்றன. 9610 நில உடமைகள் மட்டும் இரண்டு சில்லு உழவு யந்திரங்களைப் பயன்படுத்துகின்றன. எனவே 2,63,300 நில உடமைகளுள் 90990 நில உடமைகள் மட்டுமே உழவு யந்திரங்களைப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு உழவு யந்திரங்களின் பாவனை குறைந்தமட்டத்தில் காணப்படுவதற்கு யந்திரங்களின் பற்றாக்குறையும், யந்திர பாவனை உள்ளடக்கியிருக்கும் உயர்ந்த செலவும் நில உடமைகளின் சிறிய அளவும் காரணங்களாகும்.

தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடும் விடுதலை இயக்கங்கள் தமிழினத்தின் பொருளாதார விடுதலையையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம். தமிழீழத்தின் விவசாய அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கவேண்டியது அவற்றின் கடமையாகும். கிராமங்கள் தோறும் கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்படுவதனை ஊக்குவித்தல் வேண்டும். மக்களுக்கு முன்மாதிரியே நாமே ஒரு கூட்டுப்பண்ணையை உருவாக்கி அதில் மக்களை ஈடுபடுத்தவேண்டும். கூட்டுப்பண்ணையை உருவாக்க விரும்பும் மக்களை ஒருங்கு சேர்த்து பண்ணையை அமைப்பதற்கு உதவி செய்யவேண்டும். இவ்வாறு உருவாக்கப்படுகின்ற பண்ணை மேலைத்தேய நாடுகளைப் போல பாரிய அளவாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. 10 தொடக்கம் 20 ஏக்கர் வரையிலான அளவில் இப் பண்ணைகள் அமைக்கப்படலாம். இது குறித்து விடுதலை இயக்கங்கள் கவனம் செலுத்தல் வேண்டும்.

இன்று விடுதலை இயக்கங்கள் தாம் நேரடியாக உற்பத்தி முயற்சியில் ஈடுபடுகின்றன. விடுதலை இயக்கங்களின் பொருளாதாரத்தை நல்ல முறையில் பேணிக்கொள்ள இந் நடவடிக்கை துணை புரிகின்றது. ஆனால் தமிழீழப் பகுதிகளின் மொத்த உற்பத்தியினை அதிகரிப்பதற்கு இது மட்டும் போதுமானதாக அமையமாட்டாது. உற்பத்தியில் மக்களையும் ஈடுபடுத்த வேண்டும். விவசாயத்துறையைப் பொறுத்த வரையில் சிறிய-வறிய விவசாயிகளுக்கு போதிய மூலதன வசதியினையும் நிலத்தினையும் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடுத்தும் வேலைகளில் விடுதலை இயக்கங்கள் இறங்கவேண்டும். உண்மையில் உற்பத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் வகிக்கின்ற பங்கினை விடுதலை இயக்கங்

கள் வகிக்க வேண்டும். விடுதலை இயக்கங்கள் முயற்சியாளர்களாக மாறவேண்டும். உற்பத்தி நடவடிக்கைகளில் விவசாயிகளை ஈடுபடுத்தவேண்டும். அவ்வுற்பத்தியில் இருந்து பெறப்படும் வருமானத்தில் ஒரு பகுதி விடுதலையியக்கங்களுக்குச் சேர வேண்டும். இச் செயற்பாடு வருமான சம பங்கீட்டுக்கும் துணை புரியும்.

அதே நேரத்தில் விடுதலை இயக்கங்கள் மக்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது தனது சாயல்கள் அதில் விழாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். பொதுமக்களை ஈடுபடுத்தி விடுதலை இயக்கங்களினால் உருவாக்கப்படும் உற்பத்தி ஸ்தாபனங்கள் போராளிகளின் முகாம்களாக மாறுவதற்கு இடமளிக்கக் கூடாது. இல்லையெனில் வவுனியாவில் காந்தியத்திற்கு ஏற்பட்ட நிலைமை இவற்றிற்கும் ஏற்படக்கூடும். எனவே இன்றைய காலகட்டத்தில் விவசாய உற்பத்தியை தாபன அமைப்பிற்குள் கொண்டு வருவது அவசியம். இதன் மூலமே உற்பத்திப் பெருக்கத்திற்கு காணப்படும் தடைகளை நீக்கி உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதனை விடுதலை இயக்கங்களே முன்னின்று நடைமுறைப்படுத்த வேண்டும். உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட விடுதலை இயக்கம் தன்னால் மக்களை ஈடுபடுத்தி உருவாக்கப்பட்ட விவசாய உற்பத்தித் தாபனத்திற்கு வழங்கவேண்டும். ஆனால் அவ் விவசாய உற்பத்தித் தாபனமோ விடுதலை இயக்கத்தோடு நேரடித் தொடர்பற்றவர்களால் இயக்கப்பட வேண்டும். விடுதலை இயக்கம் வெளியேயிருந்து விவசாய உற்பத்தித் தாபனத்திற்கு உதவி செய்யவேண்டும். இதன் மூலம் விவசாய உற்பத்தித் தாபனம் அரச கூலிப்படைகளினால் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்க முடிவதுடன் சிறப்பான முறையில் இயங்கக்கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான நடவடிக்கை மூலம் விவசாய உற்பத்தி அதிகரிக்கும். வேலை வாய்ப்புக்கள் பெருகும்; மக்களின் வருமானம் அதிகரிக்கும் தமிழீழப் போராட்டத்தின் இன்றைய கட்டத்திலும் இதனது உச்சக்கட்டத்திலும் அதன் பின்னர் அமையப் போகின்ற தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியிலும் விவசாயத் துறையின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இத்தகைய பங்களிப்பினை விவசாயத்துறை செய்வதற்கு இன்றே விவசாயத் துறையை தயார்ப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். ✿

## இன அழிப்பு தொடரின்...

[6-ம் பக்க தொடர்ச்சி]

ற்சி தோல்வியடையுமானால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்படும். யுத்த நிறுத்தத்தை உறுதியாக அமுல்படுத்த வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்தியா இதனை நடைமுறைப் படுத்துவதற்கான பல தந்திரோபாயங்களின் இறுதி வழியாக வெளியிலிருந்து படைகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன யுத்த நிறுத்தத்தினை உறுதியாக அமுல் செய்வதற்காக இத் தனிநோக்கத்திற்காக மட்டும் தனது துருப்புக்களை இங்கு அனுப்புவதற்கான நிலைமைகள் தென்னிலங்கையினதும் மேற்குலகினதும் எதிர்ப்பு காரணமாக சாத்தியப்பட முடியாது என்பதை உணர்ந்துள்ள இந்தியா ஐக்கியநாடுகளின் படையினை இங்கு இறக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். ஆனால் இலங்கையில் ஒரு பாரிய இனப்படுகொலை இடம்பெற்ற பின்னரே இது சாத்தியப்படும். ஐக்கிய நாடுகள் படை இலங்கைக்கு அனுப்பப்படுமானால் அதில் 90% மான துருப்புக்களை தனது துருப்புகளாக அமர்த்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளும். இவ்வாறு ஐக்கிய நாடுகள் படை இங்கு அனுப்பப்படுமானால் யுத்த நிறுத்தமானது உறுதியாக அமுல் படுத்தப்படும் ஆனால் இந் நிலை எமது போராட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் அபாயகரமானது. தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவது நிறுத்தப்படுவதும் தமிழ்ப் பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதும ஐக்கிய நாடுகள் படையின் வருகையால் ஏற்படக்கூடிய அனுகூலங்களாயிருந்த போதிலும் எமது போராட்டமானது சிதைக்கப்படக் கூடிய அபாயம் உள்ளமையினை கவனத்தில் கொள்ளவேண்டும். இராணுவ நெருக்கடிகளினூடாக கூர்மையடைந்து வந்த எமது போராட்டமானது இராணுவ நெருக்கடியானது நிறுத்தப்படும் போது தன்னியல்பாகவே பின்னடைவுக்குள்ளாகும். குறைந்தது சில ஆண்டுகளாவது எமது போராட்டம் பின்னடைவுக்குள்ளாகலாம் தமிழ் மக்களின் வாழ்க்கைக் கலண்டரில் ஒரு இனப் படுகொலையும் ஐக்கிய நாடுகள் படையின் வருகையும் அடுத்தடுத்த இரு நிகழ்வுகளாக அமையலாம் என்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இவற்றை நாம் எவ்வாறு எதிர் கொள்ளப்போகிறோம் என்பதே எம்முன் உள்ள கேள்வியாகும். இத்தகைய சூழ்நிலை ஒன்று ஏற்படின் அவற்றை எதிர் கொள்ளக் கூடிய விதத்தில் எமது போராட்டத்தினை ஒழுங்கமைக்க வேண்டியது எமது கடமையாகும ✿

# புலம் பெயரும் பறவைகளும் புதிய சில சிந்தனையும்

— கவிதா —

எமது மக்களில் ஏராளமானவர்கள் இன்று தமது வேர்களை இழந்து-பிறநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். எண்பதுகளின் ஆரம்பத்தில் தொடங்கிய இந்த 'அரசியல் தஞ்சம்' எண்பத்து மூன்று ஜூலை இனப்படுகொலைகளுக்குப் பிறகு வேகம் பெற்றது. அண்மையான புள்ளிவிவரங்களின் படி, மேற்கு ஜேர்மனியில் 16,000 தமிழரும், சுவிட்ஸர்லாந்தில் 2,000 தமிழரும், பிரான்ஸில் 20 000 பேரும் ஹொலந்தில் 800 பேரும், டென்மார்க்கில் 600 பேரும, கனடாவில் 5,000 பேரும், இங்கிலாந்தில் 1,500 பேரும் ஒன்றில் அகதிகளாகவோ அல்லது 'அரசியல் தஞ்சம்' கோருபவர்களாகவோ உள்ளார்கள். இதனைவிட நோர்வே, ஸ்வீடன், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் குறைந்த எண்ணிக்கையில் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்கள்.

இவர்கள் அனைவருக்கும் அரசியல் தஞ்சம் அல்லது புகலிடம் வழங்கப்படப் போவதில்லை. மேற்கு ஜேர்மனியிலும் பிரான்ஸிலும் இதுவரை விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழர்களுக்கு அரசியல் புகலிடம் கிடைத்துள்ளது இவர்கள் தமிழீழத்தின் முன்னாள் வாய்ச சொல் வீரர்களும், முன்னாள், கூட்டணியின் இளைஞர் தலைவர்களும் (?) ஆவார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் போது சிறையிலிருந்து பின்னர் 'சிறைமீண்ட செம்மல்களாக' தாடிகளுடன் வெளிவந்து பிரதேசம் சென்று புகலிடம் பெற்றவர்கள். (இவர்களில் சிலர் அங்கிருந்து கொண்டே அந்த நாட்டு அரசாங்கங்களுக்கு ஒரு சில விடுதலை இயக்கங்களைப் பற்றி இவை மார்க்ஸிஸ்டு இயக்கம்; கொம்யூனிஸ்ட் இயககம் என்று பெட்டிசம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்)

மேற்கு நாடுகள் அரசியல் புகலிடம் வழங்குவதில் மிகவும் தாராளமாக இருப்பதென்பது அவர்களுடைய உன்னதமான மனிதாபிமானம் என்று யாராவது கருதினால் தயவு செய்து இந்தக் கட்டுரையை மூன்று தரம் வாசிககவும்

அரசியல் புகலிடம் வழங்குவது என்பதில் ஒரு மனிதாபிமான இழை உள்ளது என்பது உண்மையே. ஆனால் மேற்கு நாடுகளின் ஆட்சிமுறை பிரதானமாகவும் சோசலிஸ நாடுகளில் இருந்து அதிருப்தி அடைந்து வெளியேறும் நபர்களுக்கும் மூன்றும் உலக நாடுகளில் சர்வாதிகார ஆட்சி புரிந்து, மக்கள் எழுச்சி மூலம் நாட்டை விட்டு வெளியேறுகிற பிற்போக்குக் கும்பல்களுக்கும் உதவி புரிவதற்காகவே குறித்து நிற்பது கியூபாவின் சர்வாதிகாரியாக இருந்த பட்டிஸ்ரா, நிக்கரகுவாவின் சோமோஸா, ஈரானின் மன்னர் ஷா, என்று அமெரிக்கா 'அரசியல் புகலிடம்' அளித்துள்ளவர்களின் வரிசையைப் பார்த்தால் இது விளங்கும். விரைவில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்கோஸும், திருமதி இமெல்டா மார்கோஸும் இவ்வரிசையில் சேர்ந்து கொள்ளுவார்கள் என்று கருதப்படுகிறது.

சோவியத் யூனியனிலிருந்தோ அல்லது கியூபா நிக்கரகுவாவில் இருந்தோ அல்லது கிழக்குஜேர்மனியிலிருந்தோ வருகிற அவருக்கும், மேற்கு நாடுகள் உடனடியாக அரசியல் புகலிடம் வழங்குவது மட்டுமல்ல அவர்களைப் பயன்படுத்து, 'கொம்யூனிஸம் என்பது பயங்கரவாதம்' என்றும் மார்க்ஸிஸ அரசியல் என்பது பிசாசுகளின் செயல் என்றும் பிரசாரம் செய்துவருகின்றன. அமெரிக்காவோ அல்லது இங்கிலாந்தோ எக் காரணம் கொணடும் மூன்றும் உலக நாடுகளிலிருந்து வருபவர்களை 'அகதி'களாகவோ அல்லது அரசியல் தஞ்சம் கொடுத்தோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதுவரை எந்த ஒரு தமிழ் பேசுபவருக்கும் அமெரிக்கா அரசியல் தஞ்சமோ அல்லது அகதி அந்தஸ்தோ- வழங்கவில்லை. ஆனால் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுபவர்கள் என்று சொல்

லப்படுபவர்களுக்கும். நிக்கரகுவாவின் எல்லைப் புறங்களிலிருந்தும் ஹொண்டுராஸ் தேசத்திலிருந்தும் நிக்கரகுவா அரசைத் தாக்கிவரும் எதிர்ப் புரட்சி வாதிகளுக்கு அரசியல்தஞ்சம் உட்படப்பல வழிகளில் ஒத்தாசை புரிந்து வருகிறது.

சர்வதேச அரசியலில் கொம்யூனிஸ விரோத நடவடிக்கைகளுக்குத் துணை செய்வதாகவே மேற்கு நாடுகள் 'அரசியல் தஞ்சம் - 'அகதிகள்' என்ற அம்சங்களைப் பயன்படுத்துகின்றன.

இந்த இடத்தில் அந்தத்தேசத்து மக்களைப் பற்றியும் வேருகக் குறிப்பிடவேண்டும். ஜூலை 83 இன ஒழிப்பின் பின்னர் மேற்குலகின் அனுதாபமும், ஆதரவும் தமிழ் மக்களின் மீது குவிந்தது என்பது உண்மை தான். தொலைக்காட்சியிலும், வேறு தொடர்புசாதனங்களூடாகவும் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளைக் கண்டு அந்நாட்டு மக்கள் ஆதரவை அளித்தமை வியப்புக்குரியதல்ல. மக்களின் இத்தகைய ஆதரவிற்கும் அரசுகள் இச்சூழலில் நடந்து கொள்ளும் முறைக்கும் துல்லியமான வேறுபாடு உள்ளது.

அண்மைக் காலம் வரை மூன்ரும் உலக நாடுகளிலிருந்து, அகதிகளும் அரசியல் தஞ்சம் கோருபவர்களும் அதிகளவில் மேற்குலகிற்குப் போகவில்லை. காரணம்; ஒன்று பணம் மற்றது அதுபற்றிய அறிவின்மை.

ஜேர்மனியைப் பொறுத்தமட்டில் அகதிகளை ஏற்பதிலும், அரசியல் தஞ்சம் வழங்குவதிலும் கூடியளவு தாராளமாக இருந்தமை - ஹிட்லரின் அரக்கத்தனத்தால் ஜேர்மனி தேடிக்கொண்ட அவப் பெயரை நீக்குவது என்பதற்காகவும் தான்.

மூன்ரும் உலக நாடுகளான துருக்கி கானு, இலங்கை, ஹைட்டி போன்றவற்றிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகவும், அரசியல் தஞ்சம் கேட்பவர்களாகவும் வர ஆரம்பிக்கவே மேற்கு நாடுகளின் பாடு தர்மசங்கடத்துக்கு உள்ளாகி விட்டது.

1981இல் ஒரு மாதத்தில் மட்டுமே பேர்லினுக்கு 5,000 பேர் யாழ்ப்பாணத்திலிருந்து போயிருக்கிருர்கள். இவர்களை அனுப்பிய ஏஜன்ஸிக்காரருக்கு ஒருவருக்கு ரூபா 100 வீதம் லாபம் என்று வைத்துக் கொண்டால் (இத்தொகை மிகவும் குறைந்தபட்சம்) வருமானத்தைக் கணக்கிட்டுப்பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வாறன வருமானத்தில் அதிகளவு லாபம் பெற்றவர்களும், பெறுபவர்களும் நம்மூர் வியாபாரிகளை விட கொழும்புச் சிங்களத் தரகர்கள் என்பது மிகவும் சுவாரசியமானது.

கிழக்கு ஜேர்மனிக்கு (சோஷலிஸ நாடு) ஊடாகவே அனைவரும் மேற்கு ஜேர்மனிக்குச் செல்கிருர்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் 'எல்லைப் புற' ஒப்பந்தம் வல்லரசுகளுக்கிடையே நடைபெற்றபோது (இது POTSDAM ஒப்பந்தம் எனப்படும்) கிழக்கு ஜேர்மனி-மேற்கு ஜேர்மனிப் பிரிப்பும் அத்தோடு இணைந்ததாக கிழக்கு ஜேர்மனியிலிருந்து அல்லது கிழக்கு ஜேர்மனியூடாக எவர் மேற்கு ஜேர்மனிக்கு வர விரும்பினுலும் மேற்கு ஜேர்மனி விசா தேவையில்லை என்றும் எவ்வித இடர்ப்பாடுகளுமின்றி அவர்களை மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் உடன்பாடாயிற்று. இந்த உடன் பாட்டின் பிரதான நோக்கம் சோஷலிஸ்ட் கிழக்குஜேர்மனியிலிருந்து - முதலாளித்துவ மேற்கு ஜேர்மனிக்கு 'அதிருப்தியாளர்'களை வர ஊக்குவிப்பது ஆகும்.

துரதிர்ஷ்டவசமாக இன்று மூன்ரும் உலகத்தைச் சேர்ந்த ஏராளமானேர் கிழக்கு ஜேர்மனியூடாக மேற்கு ஜேர்மனிககு அரசியல் புகலிடம், அகதிகள் என்று வந்து குவிந்து விடுகிருர்கள். இவற்றுள் பெரும பாலனவர்கள் நம்மவர்கள்.

கிழக்கு ஜேர்மன்-மேற்கு ஜேர்மன் எல்லையில் ஃபிரடெரிச்ஸராஸா எனும் இடத்தில் சுங்கப் பரிசோதனை அதிகாரிகள் நம்மவர்களைக் கண்டதும் 'இப்படி வாங்கோ' 'கஞ்சா, அபின் ஏதாவது இருக்கா? என்று நாகரிகமாகத் தமிழிலேயே விசாரிக்கிருர்கள். அவ்வளவு தூரம் நம்மவர்கள் அந்தப் பாதையில் போயிருக்கிருர்கள்.



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

'மனித வேட்டையரால்
கொலை செய்யப்பட்டு
வீசி எறியப்பட்ட
நமது இளைஞர்களின் சடலங்கள்
மீது நடந்து
பேர்லின் விமான நிலையத்தில்
வந்து இறங்கும்
அகதிகள் கூட்டத்தில்
என்னைத் தேடி நீ
அலையாதே!

என்று நமது கவிஞனொருவன் குரலெழுப்புகிறான். அவனுடைய கோபமும், மண்ணில் தங்கியிருந்து போரிடு என்ற அழைப்பும் சத்தியமானவை.

எமது மக்களில் பல்வேறு தரத்தினர், பல் வேறு வாழ்க்கைப்படி நிலைகளில் உள்ளவர்கள்; வேறு வேறு தளங்களில் இயக்குபவர்கள் என்று ஏராளம் பேர் உள்ளனர். பொதுவாகவே தமிழ் பேசும் மக்களுக்கு உள்ள ஒரு பாதுகாப்பற்ற நிலையும், எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையும் மத்தியதர வர்க்கத்திடையே பரவியுள்ளது. ஒற்றையாட்சியில் எவ்விதமான வாய்ப்பும் தமக்குச் கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியானதும் பலர் வெளியேற விரும்புகிறார்கள்; வெளிவேறுகிறார்கள். இவர்கள் அனைவரையும் வெளியேறாதே! இங்கே நில் என்று இராணுவச் சட்டம் போல தடை செய்ய இயலாது. அது சாத்தியமும் இல்லை'

ஆனால் இவ்வாறானவர்களைப் போராட்டத்துக்குள் ஈர்சகிற வகையில் வேலைத்திட்டங்களும், வெறுமனே மக்கள் போராட்டம்! மக்களோடு இணைந்து போவோம், என்று கூச்சல் போவதை விடுத்து யதார்த்தபூர்வமாகவும், நடைமுறையிலும் இவர்களைப் பங்களிக்க வைக்கிற முயற்சியில் ஈடுட வேண்டும்.

விடுதலைப் போராட்டம் என்பதில் ஆயுதங்கள் முக்கியமான அம்சம்; ஆனால் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்கள் தான். தேசிய விடுதலைப் போரில் எல்லாவகையான மக்களையும் ஒன்றிணைக்கின்ற பிரதானமான அம்சம் ஒன்று உள்ளது. இதனைப் புரிந்து கொள்ளத் தவறுவது எதிர்கால ஆபத்துக்களுக்கு இட்டுச் செல்வதாகும்.

யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொறுத்த வரையில்-யாழ்ப்பாணத்தின் சமூக-புவியியல்-காலநிலை அமைப்பு அவர்களை எப்போதும் புலம் பெயர்கிற, போஸ்ரல்-ஓடர், மணி ஓடர், ட்ராவ்ப்ட்டுகளை நம்பியிருக்கிற ஒரு பொருளாதார அமைப்பினுள் வைத்திருக்கிறது. தளப் பிரதேசமாகவோ, சுய-பொருளாதார நிறைவுடையதாகவோ அது அமையமுடியாது. சுதந்திர யாழ்ப்பாணத்தைக் கனவு காண்பவர்கள் எம்மிடை இல்லாமல் இல்லை.

இத்தகைய சமூக-புவியியல்-காலநிலை அமைப்பு அரசியல் ஸ்திரமின்மை, பாதுகாப்பின்மை, எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையுடன் இணைகிற போது தமிழர்களை அது நெருக்கற் வேகத்தில் பரதேசம் போக வைக்கிறது. இந்தச் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு கிழக்கு மாவட்டங்கள், வவுனியா போன்ற இடங்களிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களும் யாழ்ப்பாணம் நோக்கி வருகிறார்கள் போராட்டம் தீர்க்கதரிசனத்துடனும் அரசியல் நெறிப்பாட்டுடனும் முன்னெடுக்கப்படாவிட்டால் மனனார், மட்டுநகர் போன்ற இடங்களிலிருந்தும் அகதிகள் பாதிக்கப்பட்ட மக்களை அரசின் ராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கித் தள்ளிவிடும்.

பொருளாதார—ரீதியில் இந்நிலையைத் தாங்குவது சாத்தியமா? யாழ்ப்பாண நோக்கும் குடாநாட்டுப்பார்வையும் (Jaffna Centric and Peninsula Out look) எம்மிடம் இன்னும் உள்ளது. அரசியல், ராணுவ, சமூக, கலாசார தளங்கள் அனைத்திலும் இது களைந்தெறியப்படும் வரை முன்னோக்கிய பாரிய பாய்ச்சல்கள் எமக்குச் சாத்தியமில்லை இதை மட்டும் நாங்கள் புரிந்து கொண்டால் போதும்,

★ ★ ★

# தேசமெனும் தகமை
# ஐதீகங்களும் யதார்த்தங்களும்

தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக, தமிழ் — சிங்கள இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் வெவ்வேறு நிலைகளை கொண்டிருக்கும் இவ்வேளை, சரியான மாக்சிய நிலைப்பாட்டின் அடிப்படையில் சிந்தக அளிக்கும் சில விடைகளின் இறுதிப் பகுதி இங்கே தரப்படுகின்றது.

மே 15, யூன் 1, 15 யூலை 1-ம் திகதி லங்கா கார்டியன் இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தமிழாக்கத்தின் சென்ற இரு இதழ்களின் தொடர்ச்சி.

ஐதீகம் 15

"வடக்கு நிலப்பிரபுத்துவ முறையினைக் கொண்ட, அபிவிருத்தியடையாத பகுதியாகும். அதன் சமூக அமைப்பு சாதியை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டது; (ஆகவே வடக்கில் அரசியல் பிறபோக்கு வாதமும் பழமை வாதமும் கொண்டது)"

வடக்கு, நிலப்பிரபுத்துவ முறையைக் கொண்டதல்ல, ஆனால் அதன் சமூக பொருளாதார அமைப்பில் முதலாளித்துவ உற்பத்தித் தொடர்பு முறைகள் தான் முக்கியத்துவம் வகிக்கின்றன. வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையேயுள்ள புவியல் ரீதியான வித்தியாசங்களின் காரணமாக, காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தின் போது வடக்கில் திறம்பட்ட நீர்ப்பாய்ச்சல் வசதிகள் காணப்படவில்லை. இக் காரணத்தாலும் இதனால் விளைந்த உற்பத்தி காரணிகளிலும், உற்பத்தி சாதனங்களிலும் ஏற்பட்ட வித்தியாசங்களாலும், தீவின் இருபகுதிகளினதும் உற்பத்தியின் சமூகத் தொடர்புகளும் வேற்றுமைப்பட்டன. பாரியநீர்ப்பாய்ச்சல் அமையப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஆசிய முறையான உற்பத்தி சிங்கள இடங்களில் முக்கியத்துவம் பெற, தமிழ்ப் பகுதிகளில் நிலப்பிரபுத்துவ முறையை அடிப்படையான இறுகிய சாதி அமைப்பு முக்கியம் பெற்றது. சிங்களப் பகுதிகளில் விளங்கிய 'ஆசியார்த்த' (அ - து ஆசியாவில் பெரிதும் காணப்படும் குணாதிசயங்களைத் தழுவிய) சமூக உறவுகள், வடக்கின் நிலைமையிலும் பார்க்க கூடுதலான கூட்டு முறை தன்மையைப் பெற்றிருந்தது. வடக்கு பணவைப்பு சேமிப்பில் ஆர்வங்காட்ட, சிங்களப்பகுதிகள் பெரும்பாலும் நுகர்விலேயே ஈடுபட்டன; அத்துடன் தமிழ்பகுதிகள், காலனித்துவ யுகத்திற்கு முன்னரே தனி உடைமை அமைப்பை கொண்டிருந்ததற்கு அறிகுறிகளைக் கொண்டிருந்தன. இந்த தன்மைகள் அராபியரின் வியாபார முதலுடன் இருந்த தொடர்புகளால் மேலும் வலுவாக்கப்பட்டது. காலனித்துவத்தின் முதற் கட்டமாகிய வர்த்தக முதலாளித்துவ செயங்கள் இத்தன்மைக்கு உத்வேகம் கொடுக்க, காலனித்துவத்தின் பிற்கட்டம் (அதாவது, முதலாளித்துவம்) முதலாளித்துவ தனி உடைமை அமைப்பு நிலப்பிரபுத்துவமுறையின் மேலாக தாபிக்கப்பட உதவியது.

வட பகுதியின் பொருளாதரத்தில் காணப்படும் உயர்ந்த அளவான பணமயப்படுத்தல் (அதாவது பணம் வகிக்கும் முக்கியத்துவம்), மிக உயர்ந்த அளவான தனிமனித கடன் பயன்பாடு, முதலாளித்துவ ஊககுவிப்புகளுக்கு வடக்கின் விவசாயி காட்டும் சிறந்த பதிலளிக்கும் தன்மை, அவன் பாவிக்கும் அதிக அளவான விவசாய இரசாயனங்களின் உள்ளீடு என்பன, வடக்கு நிலப்பிரபுத்துவ அபிவிருத்தியின்மையில் உழல்கின்றது என்ற வாதத்தின் பிழையை நன்றாக எடுத்துக்காட்டுகிறது. சாதி அமைப்பு உணர்வு ரீதியாகவும் தத்துவார்த்த

ரீதியாகவும் (அதாவது, மேல் - அமைப்பில்) காணப்படுகிறதேயன்றி, உப—அமைப்பில் (Sub-Structure) மிக சாதுவாகவே காணப் படுகிறது. சாதிப்பாகுபாடுகள் காணப்படுவது அச்சத்திற்குரிய தொன்றல்ல, ஏனெனில் மிக அபிவிருத்தியடைந்த நாடுகள் உட்பட எல்லா முதலாளித்துவ நாடுகளின் மேல்-அமைப்பிலும் (Super-Structure) முதலாளித்துவத்திற்கு முன்னைய காலத்து அபிப் பிராயங்கள் இன்றும் காணப்படுகின்றன; உ+ம்: பிரித்தானியாவில் முடிக்கு ஆதரவு.

பல ஆபிரிக்க ஜனங்கள் தொடர்ச்சியான சுதந்திரப் போராட்டத்தின் போது எப்படி தம் கூடார (Tribal) த்திற்கான ஆதரவையும் பட்சபாதங்களையும் கடந்து சென்றார்களோ, அப்படியே அல்ஜீரியாவிலும் வியட்னாமிலும் "ஆண் ஆதிக்கம்" (பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்) உடைத்தெறியப் பட்டது. (பனன்/ fanon, கப்ரால் / cabral) ஆகியோரை வாசிக்கவும்) அதேபோல் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடும் போதே சாதிப் பாகுபாடு, ஆண் ஆதிக்கம் என்பன தமிழ் மக்களின் உணர்விலிருந்து அகற்றப்படும். தமிழ் தீவிரவாத இளைஞரிற் பலர் "தாழ்ந்த சாதி" யிலிருந்தே வருகின்றார்கள் என்பது, இந்தப் போக்கு இப்பொழுதே தொடங்கிவிட்டது என்பதை நிரூபிக்கின்றன.

லெனினின் காலனித்துவத்தைப்பற்றிய பெயர்பெற்ற "பின்தங்கிய ஐரோப்பா, அபிவிருத்தியடைந்த ஆசியா" எனும் கட்டுரையானது பாரம்பரியங்கள் நிறைந்த ஆசியா, முதலாளித்துவ நன்கு அரசியல் மயப்படுத்தப்பட்ட ஆசியாவிலும் பார்க்க பின்தங்கியது என்ற மார்க்சிய கொள்கையை தோற்கடித்தது. தெற்கில் நடக்கும் புரட்சியின் பின்தான் வெற்றிகரமான சிங்கள பாட்டாளிகள், பழமைவாதம் நிறைந்த வடக்கை சாதியின் கட்டுகளில் இருந்து விடுவிக்க வேண்டுமென்ற பெருமையான கொள்கையைக் கொண்ட இலங்கை இடதுசாரிகள் லெனினின் இந்தக்கட்டுரையைக் கட்டாயமாக வாசிக்க வேண்டும்.

ஐதீகம்:16

"தனிநாட்டிற்கான கோரிக்கை பிரதேச எல்லையின முழுமைக்குச் சவாலாக அமைவதால், இக் கோரிக்கை எதிர்க்கப்பட வேண்டும்".

முதற்படியாக, பாட்டாளிகளின் பூர்சுவாக்களுக்கு எதிரான போராட்டம் தேசிய ரீதியாகத்தான் வடிவம் பெற்றாலும், இதன் இறுதிப்படி, மாக்சின் புகழ்பெற்ற சொற்றொடரின்படி "பாட்டாளிக்கு ஒரு நாடு இல்லை" என்பதேயாகும். ஆகவே, ஒரு பூர்சுவா அரசின் ஒற்றுமையையும் முழுமையையும் காக்கவோ, காலனிததுவம் நிறுவிய எல்லைகளைப் பாதுகாக்கவோ, வேண்டிய கடப்பாடு இடதுசாரிகளுக்கு இல்லை. பாட்டாளிகளின் சர்வதேசவாதமே எந்த உண்மை பொதுவுடமை வாதியினதும் நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டுக்கதையை முன்வைக்கும் மாக்ஸிஸ்டுகளிடம் நாம் கேட்கவேண்டிய கேள்வி என்னவெனில், ஆளும்கட்சியின் திறந்த பொருளாதார கொள்கை தான் தேசிய இறைமையையும் முழுமையையும் தோற்கடிக்கின்றமையால், இடதுசாரிகள் "ஊடுருவப்பட்ட அரசை" பற்றியே கூடிய அக்கறையுடையவர்களாய் இருக்க வேண்டும். (அதாவது, சர்வதேச முதலான டாலர். டொயிட்ஸ்மார்க், யென் என்பவற்றின் ஊடுருவலால் ஏற்படும் புதிய பயங்கரமன பயமுறுத்தல்) இத்தகைய பிரிவினைக்கு எதிராகவே எந்த உண்மையான "தேசிய" போராட்டமும் மேற்கொள்ளப் படவேண்டும். பிடல் காஸ்ட்ரோ 1973-ல் அல்ஜியாவில் கூறியது போல உயிரற்ற எதிரியை எதிர்ப்பதென்றால் அதன் கருத்து உயிருள்ள எதிரிக்கு உதவுவது என்பதாகும்.

ஐதீகம் 17

"தனிநாட்டிற்கான எவ்வகையான போராடடமும் வல்லரசுகளின் ஈடுபாட்டை வரவழைக்கும்; அவர்களின் போட்டியில் தமிழர் கைப்பொம்மைகளாக மாற்றப்படுவர்"

குறிப்பிடத்தக்க வாரியான மாக்சிஸ்டு களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ள இந்த அபிப்பிராயம், வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி உலக சரித்திரத்தினை நிர்ணயிக்கும் ஒரேயொரு காரணியாக நோக்குகின்றது. ஆனல் இக் கருத்து தர்க்கீகமற்றது. விஞ்ஞான ரீதியுமற்றது. புறநிலைக் காரணிகளையே நிர்ணயிக்கும் காரணிளாக இது காண்கிறது.

"சர்வதேச சமூக ஜனநாயகத்தின் கடமைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை" என்றதை எழுதிய ரோசா லக்சம் பேர்க்கும் இத்தகைய கருத்தையே பரப்பினர்; அதாவது "இந்த ஏகாதிபத்திய யுகத்தில் சிறு நாடுகள் வல்லரசுகளின் சூதாட்டத்தில் கை பொம்மைகளாக பாவிக்கப்படுகின்றன". இந்தக்கருத்து இரக்கமற்ற முறையில் லெனினலேயே தோற்கடிக்கப்பட்டது.

இந்தப் பிழையான "லக்சம் பேர்க்கிய" நிலை இந்த நாட்களில் சீன கம்யூனிஸ்ட் கட்சியால் ஆதரிக்கப்படுவதோடு, எம். நாட்டு மாவோ ஆதரவாளராலும் சாதாரணமாகப் பின் பற்றப்படுகிறது. உலக அரசியலில் வல்லரசுகளின் செய்வினைகளை மட்டுமே இவர்கள் கணிப் பெடுப்பதால், தேசிய சுதந்திர இயக்கங்களை இந்நோக்கில் கணிக்கும் போது பெரிய பிழைகளுக்குள் விழுந்து விடுகின்றனர். (உ+ம் அங்கோல போராட்டத்தினை இந் நோக்கில் கணித்ததால் சி. ஐ. ஏ. உதவிய அணிகளையும் தென்னபிரிக்காவின் ஈடுபாடுகளையும் ஆதரிக்கும் நிலைக்கு இவர்களை இழுத்துச் சென்றது)

இவர்கள், மாவோ ஒரு காலத்தில் ஏற்றுக் கொண்ட, ஒரு அடிப்படை மார்க்சிய தர்க்கீக தத்துவத்தை கணிப்பெடுக்கவில்லை. அதாவது "சமூக அபிவிருத்திக்கு முக்கிய காரணம் அகநிலைக் காரணிகளே யன்றி புற நிலைக் காரணிகள் அல்ல. அக நிலை முரண்பாடுகளிற் தலையிடும் புறநிலைக் காரணிகளின் நடவடிக்கைகள்; அகநிலை காரணிகளின் தோற்றங்களே. புற நிலை நோக்கில் ஒரு நிகழ்வின் இயக்கம் எப்படியாகத் தோன்றினலும், அது முக்கியமாக அகநிலைப் பண்புகளிலேயே தங்கியிருக்கிறது.

ஆகவே மாக்சியத்தின் நோக்கில் தேசிய உரிமைப்போராட்டங்கள் அகநிலை பண்புகளின் தோற்றங்களே; "இவை ஒரளவிற்கு புறநிலைக் காரணிகளின் செல்வாக்கிற்கு உள்ளானலும் (பாதகமாகவோ, சாதகமாகவோ), ஈற்றில் இவை அந்தந்த மக்களின் சரித்திர உண்மையாலேயே உருவாக்கப்பட்டவை" (அமில் கார் கப்ராலின் "கினியில் புரட்சி" யிலிருந்து எடுக்கப்பட்ட வசனங்கள்).

தேசிய இயக்கங்களைக் கணிப்பீட்ட போது, லெனினும், மாக்சும், கூட இந்த நோக்கையே கொண்டிருந்தனர்.

"வல்லரசுகள்", "புறநிலைக் காரணிகள்" என்பவை பற்றி கதைக்கும் இடது சாரிகளுக்கு, போலந்திய பிரச்சினையின் போது மாக்சும் என்ஜல்சும் எழுதிய பின் வரும் வசனங்களை ஞாபகப்படுத்தல் தகும்."

"தமது எதிர்கால வளர்ச்சிக்கான நிலைமைகளை வென்றெடுக்கும் முயற்சியிலிருந்து போலந்தியரைத் தடுத்து வைப்பதோ, அல்லது சர்வதேச கண்ணேக்கில் அவர்களது தேசிய சுதந்திரத்தை வென்றெடுப்பது ஒரு முக்கியமற்ற விஷயம் என்று சொல்வதோ, எமது தொழில் அல்ல.

ஐதீகம் 18

"வர்க்கப் போராட்டமே அதிமுக்கிய காரணியாக இருப்பதால், தேசிய பிரச்சினையில் கவனஞ் செலுத்துவது எமது முழு நாட்டினதும் வர்க்கப் பிரச்சினைக்குப் பாதகமாக அமையும்"

வர்க்க முரண்பாடுகளே எந்த முதலாளித்துவ சமூகத்தினதும் முக்கிய அம்சமாகும். ஆனல் லெனின் கூறினர். "ஒரு அரசியல் அரங்கின் முன்னணியில் ஒரு குறிப்பீட்ட தேசியப் பிரசினை தற்காலிகமாக ஏற்பட முடியாதென நாம் திட்டவட்டமாகக் கூறமுடியாது."

லெனினின் இந்தக் கூற்று எவ்வளவு பொருத்தமானது. தமிழ்ப் பிரச்சனை என அழைக்கப்படும் பிரச்சனை பல காலமாக பாராளு மன்ற நாடக அரங்கில் ஒரு குட்டித் திட்டமா



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

கவே இருந்தது. இப்போது இது அரங்கின் முன்னணியில் இருக்கிறது. இந்தப் பிரச்சினை இலகுவில் மறையாது. இது ஒப்பீட்டு ரீதியில் ஒரு முக்கியத்துவமற்ற இடத்திற்கு தள்ளப்படவும் முடியாது என்பதை எல்லா சோசலிஸ்டுகளும் முற்போக்கு வாதிகளும் கவனிக்க வேண்டும். இன்று எம் தீவின் அரசியலில் இத் தேசியப் பிரச்சினை ஒரு முக்கிய இணைகருவியாக அமையக்கூடும். முற்போக்கு வாத சிந்தனையினதும் நடைமுறைகளினதும் புரட்சிகரமான வரைவிலக்கணமாக, மையமாக, இந்தப் பிரச்சினை அமையக்கூடுமென்பதை எல்லாசோசலிஸ்டுகளும் உணரவேண்டும்.

ஐதீகம் 19

**"தமிழரின் தனிநாட்டு அரசுக்கான போராட்டம் இலங்கை பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்திற்கு பாதகமாக அமைவதால் அது எதிர்க்கப்பட வேண்டும்"**

சமநிலை நோக்கில் தமிழ் மக்களின் போராட்டம், நாட்டு பாட்டாளி வர்க்கத்தின் முக்கிய எதிரியான ஆளும் வர்க்கத்திற்கும் அதின் அரச இயந்திரத்திற்கும் எதிராக அமைந்திருக்கிறது. லெனினும் பொல்செவிக்குகளும் ஜாரிஸ்ட் தனி ஆட்சியை நிலைகுலையச் செய்வதற்குச் சாதகமாக பழைய ரூசிய முடியாட்சியின் கீழ் இருந்த ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களைப் பாவித்தனர். இந்த ஜனநாயக இயக்கங்களை, சமூக மாற்றத்திற்கான பொதுப் பிரச்சினைகளுடனும் ஆளும் அரச சக்திக்கெதிரான போராட்டத்துடனும் லெனின் இணைத்துக் கொண்டார். ஆகவே தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம், இலங்கை சோஷலிச புரட்சிக்கு எதிரிடையானதாக அல்ல, ஆனால் இணைந்த முழுமையாக கணிக்கப்பட வேண்டும். அத்துடன் சிங்கள பாட்டாளி வர்க்கத்தை ஒடுக்கப்பட்ட தமிழ்தேசிய இனத்துடன் இணையவைக்கும் கருவியாக தமிழர் போராட்டம் கருதப்பட வேண்டும்.

அயர்லாந்திய பிரச்சனையின் போதைய மார்க்சின் கருத்துக்கள் இங்குமிகப் பொருத்தமானவை. மார்க்சின் கருத்து என்னவெனில் ஒடுக்கப்பட்ட இனத்தின் தேசிய விடுதலையே தேசிய பிளவுகளையும் முரண்பாடுகளையும் வெற்றிகொள்ள உதவுவதோடு' இரு தேசிய இனங்களினதும் பாட்டாளி வர்க்கங்கள் தம் பொது எதிரியான முதலாளித்துவத்தை எதிர்த்து போராடவும் வழிவகுக்கிறது. மறுபக்கத்தில் ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தை ஒடுக்குவது, ஒடுக்கும் தேசியஇனத்தின் பூர்சுவாக்கள் தம் தொழிலாளர்மீது சிந்தனை ரீதியான ஆதிக்கத்தை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ''இன்னொருதேசிய இனத்தைஒடுக்கும் ஓர் தேசிய இனம் தன அடிமைச் சங்கிலிகளை தானே உருவாக்கிக் கொள்கிறது'' ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலையே, ஒடுக்கும் இனத்தைச் சேர்ந்த ஆளுமகட்சியின் பொருளாதார, அரசியல் இராணுவ சித்தாந்த அத்திவரங்களை பல வீனப்படுத்துகிறது எனவே அயர்லாந்தின் விடுதலையை, இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்கான முதல நிபந்தனையாக மார்க்ஸ் கணித்தார். பாட்டாளிவர்க்கத்தின் தொகை சிறுபான்மையாகவுள்ள சிறீலங்காவில் இந்தக் கணிப்பு இன்னும் உண்மையானதாகும்.

ஐதீகம் 20

"இன்றைய முக்கிய அபாயம் பாசிசமாகையால், முற்போக்குவாதிகளின தலையாய கடமை, தமிழர் உட்பட எல்லா சக்திகளையும் ஒரு பரந்த தளத்தில் இந்த அபாயத்திற்கெதிராக அணிதிரட்டுவதே".

இந்த அபாயம் நிச்சயமாக நிலவுகின்றது, ஆனால் சரித்திரம் (முக்கியமாக நாசி ஜேர்மனியின்சரித்திரம்) நிரூபிப்பது என்னவென்றால் இனவாதமே பாசிசத்தின் முதல் வெளிப்பாடாகும். முதலாளித்துவத்தின் சுக்கல்கள் பலமடைய, வர்க்க உணர்வை திசை மாற்றுவதற்கும் தணிப்பதற்கும் பூர்சுவாக்கள் பாவிக்கும் யுக்தி இனவாதமே. இனவாதம், ஊறியுள்ள குட்டி பூர்சுவாக்களையே ஆளும வர்க்கத்தினர் புரட்சிக்கு எதிரான ஆயுதங்களாகப் பாவிக்கின்றனர். லெனின் சுட்டிக்காட்டினன்; குட்டி முதலாளிகளை உருவாக்கும் சமூக பொருளாதார காரணிகள், குட்டி பூர்சுவா பட்சபாதங்களின் மிக ஆழமானதான தேசிய இன சுயநலத்திற்கும் குறுகிய மனப்பான்மைக்கும் ,விசேட வலிமையை வழங்குகின்றன; (தொகுக்கப்பட்ட எழுத்துகள் 31ம் தொகுப்பை பார்க்

கவும் Collected Works Vol. 31) இந்த இன வாததொற்றுநோயிலிருந்து உழைக்கும் வர்க்கமும் (முக்கியமாக அதன் பின்தங்கிய பகுதியினர்) விலகியிருக்க கூடியவர்கள் அல்ல, ''தொழிலாளரிடையே வேர் கொண்டிருக்கும் இது சூழலை நச்சுப்படுத்துவதுடன் வித்தியாசமான இனங்களின் தொழிலாளரிடையே ஒருவரிலொருவர் நம்பிக்கையின்மையையும் ஐக்கியமின்மையையும் வளர்க்கிறது'' என்று ஸ்டாலின் எச்சரிக்கிறார். ஆகவே பாசிசத்திற்கெதிராகவெற்றிகரமாக போரிட வேண்டுமானால் பேரினவாதத்தை அதாவது சிங்கள வகுப்பு வாதத்தை) முறியடித்து, தமிழருடன் அணிதிரண்டு சர்வதேச வாதத்தை நிலைநாட்ட வேண்டும்; (இதற்கு ஒரு முக்கிய காரணம் என்னவெனில், இத்தகைய போராட்டம் ஒன்று ஏற்பட்டால் இச்சூழ்நிலையில் வடக்கு ஒரு 'பின் காவல் அணி' யாகவும் ''விடுதலையாக்கப்பட்ட பிராந்தியம்.'' ஆகவும் கடமையாற்ற முடியும்.)

ஐதீகம் 21

''தமிழ் இடதுசாரிகள் பிரிவினைக்கான போராட்டத்தை எதிர்க்க வேண்டும்''

மாறாக, தமிழ் மார்க்சிய வாதிகளின் கடமை என்னவென்றால், தற்போதய தடுமாறும் தலைமையிடமிருந்து தேசிய இயக்கத்திற்கான தலைமையை பறித்தெடுப்பதும் ஒரு இடதுசாரி தலைமையை ஏற்படுத்துவதும் இத்தேசிய போராட்டத்தின் மூலம் நித்திரையாக இருக்கும் தமிழ் விவசாயிகளை செயல்படவைப்பதும் முற்போக்கு மயப்படுத்துவதுமாகும். தமிழ் மார்க்சியவாதிகள் இன்னும் காணப்படும் பாராளுமன்றப் போலி நம்பிக்கைகளை எதிர்த்து, த.வி. கூட்டணி தலைமைக்கு சவாலாகவும் ஒற்றுமையாகவும் ஐக்கிய முன்னணி என்ற தந்திரத்தை கையாள வேண்டும். ஒரு சுதந்திரமான சோஷலிச அரசை ஸ்தாபிக்க அவர்கள் போராட வேண்டும். தொடரும் போராட்டத்திலிருந்து அவர்கள் ஒரு போதும் விலகி நிற்கக்கூடாது; ஏனெனில், இதனால் அவர்கள் அரசியற் தனிமை அடைவதோடு தேசிய இயக்கத்தில் பூர்சுவாக்களின் ஆதிக்கம் நிறுவப்படவும் காரணராகிவிடுவர். பங்களாதேசத்தை எடுக்கும் போது, அங்கு குறிப்பாக இதுதான் நடைபெற்றது.

ஐதீகம் 22

''தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது இடதுசாரிகளை சிங்கள மக்களிலிருந்து பிரித்துவிடும். ஆகவே இப்படி ஆதரிப்பது சாத்தியமானதல்ல, அரசியல் தந்திரம் மிக்கதல்ல''

அதன் தொடக்கத்திலிருந்தே பொல்ஷெவிக் கட்சி, ஜாரிஸ்ட் முடியாட்சியின் கீழிருந்த ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தனியாகப் பிரியும் உரிமை உடையன; என்று ஆதரித்து வந்தது. ரூசியர் அற்றவர்கள் ரூசியரிலும் பார்க்க 57%-43% என்ற விகிதத்தில் அதிகமாக இருந்த சூழ்நிலையிற்கூட இப்படி ஆதரித்தனர் ஆனால் இதனால் பொல்செவிக்கட்சியிலர் ரூசிய தொழிலாள வர்க்கத்திலிருந்தோ ஏழைவிவசாயிகளிலிருந்தோ தனிமையாக்கப்படவில்லை என்பது நாம் நன்கறிந்த உண்மை. ஆனால் 'மறு பக்கத்தில் லிபரல் ஜனநாயக கடேட் (Liberal Democratic Cadet) கட்சியும மென் - சவிக்குகளுமே; ''நாட்டை பிரிப்பதை'' எதிர்த்தார்கள். ஆனால் பொல்செவிக்குகளால்புறங்காணப்பட்டவர்களே ரூசிய பாட்டாளிகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டார்கள். அதேபோல, சாவயேசவாதத்தை ஆதரித்து, கறுப்பு கரும்புத் தோட்ட தொழிலாளரை ஆதரித்த கியூபபுரட்சி வாதிகள், பெரும்பாலமையினரான மென் - நிறத்தவரின ஆதரவைப் பெறுவதில் எவ்விதத்திலும் கஸ்டத்தை எதிர்நோக்கவில்லை. மாறாக, கியூ ரவில் கரும்புத் தோட்டத் தொழிலாளர் புரட்சியில முக்கிய ஆதரவாளராக மாறினர்; அதேபோல ஈ. எச். காரக்குகன் தேசிய உரிமைப் பிரச்சினையில் எடுத்த பிரபல்யமான நிலைப்பாட்டால் அவர்களில் நம்பிக்கையை வளர்த்த ரூசியர்கள் - அற்ற மக்களின் தீர்க்கமான ஆதரவு இருந்திருக்காவிடில் புரட்சியின் பின் ஏற்பட்ட ஏகாதிபத்திய வாதிகளின் தலையீட்டு போர்களை பொல்செவிக்குகள் தோற்கடித்திருக்க முடியாது.

ஆகவே, இடதுசாரிக் கட்சிகள் சரியான அரசியல் போக்கையும், சரியான தந்திரத்தையும் செயல் முறையையும் கொண்டிருப்பதுடன் சாதாரண மக்களின் எண்ணங்களை சரியாக பிரதிபலிக்கக்கூடிய முறையில் தேசியப் பிரச்சனைக்கான கோரிக்

(தொடர்ச்சி 19-ஆம் பக்கம் பார்க்க)



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# தமிழீழப் பகுதிகளில் நீர்வளம்

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

-வாசன்-

## (2) புத்தளம் — வனத்தவில்லு பிரதேசம்

புவிப் பௌதீகவியல் தொழில் நுட்ப முறைகளையும், புவிக்காந்தவியல் நுட்பமுறைகளையும் பயன்படுத்தி சமீபகாலத்தில் இப்பகுதியின் தரைக்கீழ் பாறைப் படைகளின் இயல்புகள் ஓரளவுக்கு அறியப்பட்டுள்ளன. இவற்றுடன் இப்பாகங்களின் விமானப்படங்களை ஆராய்ந்தவிடத்து தரைக்குக் கீழ் பாறைப் படைகளின் தன்மை, இவற்றிலேற்பட்டுள்ள பிளவுகள், மேலுயர்த்துகைகள் என்பன பற்றியும் புவிவெளியுருவவியல் பற்றியும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. தரையின் கீழுள்ள இத்தகைய அமைப்பின் காரணமாக இப்பாகத்தில் சிறந்ததொரு நிலநீர் தாங்கு வடிநிலம் அமைந்து காணப்படுகின்றது.

இப்பாகத்தின் மேல் மண்படையில் ஓர் நிலநீர்வலயம் அடைந்து காணப்படுகின்றது. எனினும் இது தரத்தில் குறைந்த நீர்த்தன்மையுடையதாயும் மழைப் பருவத்தின்பின் விரையாகக் குறைவடைந்து விடக்கூடிய தன்மையையும் கொண்டுள்ளது.

மேற்பரப்பின் கீழ் ஏறத்தாள 50 மீற்றர் ஆழத்திற்கு அப்பால் இப்பாகத்தில் காணப்படுகின்ற ஜுராசிக் காலத்துக்குரிய (JURASSIC) மன்னார் மணற்கற்படைப் பாறை அமைப்புத்தான் சிறந்த நிலநீர்த் தாங்கு குகைகளை (AQUIFERS) உடையதாக காணப்படுகின்றது இதுவரை இப்பாகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிருந்து, ஏத்றதாள 200 அடி ஆழத்தில் ஆட்டீசியன் (ARTESIAN) தன்மையான நிலநீர்த்தாங்கு குகை அமைந்திருப்பதை அறிய முடிகின்றது. இப்பாகத்தில் அமைக்கப்பட்ட சில குழாய்க்கிணறுகளில், மேற்குறித்த ஆழத்கிலிருந்து தரையின் மேற்பகுதிவரை நீர் மேல் நோக்கி உயர்ந்து வந்ததைக் காணக்கூடியதாயிருந்தது. ஆழத்திலிருந்து மேல்நோக்கி உயர்ந்து வந்த நீர் இலவன்குளம், காரைதீவு போன்ற பகுதிகளில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்ட பொழுது பெருமளவுக்கு உயர்ந்து வடிந்தது (OVERFLOW).

இவ்வாறு அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகளில் குறிப்பாக இப்பிரதேசத்தின் வடகிழக்குப் பாகங்களில் அமைக்கப்பட்ட கிணறுகளிலிருந்து நிமிடத்துக்கு 300 கலன் நீரை வெளியேற்றக் கூடியதாயிருந்தது. பொதுவான ஒரு மதிப்பீட்டின்படி இப்பாகத்தில் வருடாந்தம் 20,000 ஏக்கர் அடி நீர் கிடைக்கக்கூடியதாய் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வனத்தவில்லு பிரதேசத்துகுத் தெற்காயுள்ள மதுரங்குளி என்னுமிடத்திலும் நிலநீர்த் தோட்டம் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியளித்தது. இன்று பல அலுவலகங்கள் குழாய்க்கிணறுகளின் மூலம் இந் நீரைப் பெற்றுப் பயன்படுத்துகின்றன. ஏறத்தாள 120 அடிககும் 230 அடிக்குமிடைப்பட்ட ஆழத்திலேயே இப் பாகத்தில் தரத்தில் சிறந்த நன்நீர்ப்படை காணப்படுவதகாவும் இதற்கு மேலும் கீழும் உவர்நீர்ப்படை அமைந்திருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

## (3) மன்னார்—பூநகரி வலையம்

ஏறத்தாள வனத்தவில்லு பாகத்தின் பாறையமைப்பை ஒத்ததன்மையே இங்கும் காணப்படுகின்ற பொழுதிலும், இங்கு ஆட்டீசியன் தன்மையான நிலைமைகளைக் காணக்கூடியதாயில்லை. வனத்கவில்லுவுக்கு வடக்காகவுள்ள இக்கரையோரப் பிரதேசத்தில் ஏறத்தாள 600 சதுர மைல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் 17 தோட்டக் கிணறுகளையும் 23 பரீட்சார்த்தக் கிணறுகளையும் பயன்படுத்தி இப்பாகத்தில் நிலநீர்த்தாங்கு குகைபற்றியும், பெறக்கூடிய நீர்பற்றியும் அறியப்பட்டது.

இவ்வலையம் கடல்நீர் ஊடுருவலினல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமைக்கு இப் பாகத்தின் நீர்ப்புவிச்சரிதவியற் காரணிகளே (HYDROGEOLOGIC FACTORS) அடிப்படையாகவுள்ளன. எனினும் முருங்கன், முழங்காவில் ஆகிய பாகங்களிலுள்ள நிலநீர் விருத்தி செய்யப்பட்டு நீர்ப்பாசனத்திற்கு இன்று பயன்படுத்தப்படுகின்றது. முருங்கனில் அமைக்கப்பட்ட 8 அங்குல விட்டத்தையும் 200 அடி ஆழத்தையுமுடைய 15 கிணறுகள் நிமிடத்திற்கு 100 - 200 கலன் நீரை வெளியேற்றக்கூடியனவாயிருக்கின்றன. இப் பிரதேசத்தில் நீர்ப் புவிச்சரிதவியல் நிலைமைகள் இன்னும் அதிகளவு நிலக்கீழ்நீரைப் பெறக்கூடிய சாதகமான நிலைமைகளைக் கொண்டுள்ளன

## (4) பரந்தன்—முல்லைத்தீவு வலயம்

சமீப காலத்தில் பரந்தன் தொடக்கம் புதுக்குடியிருப்புப் பகுதிவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து ஏறத்தாள 200 தொடக்கம் 800 அடி ஆழம் வரையிலான தடிப்பையுடைய கரையோர அடையற்பாறைப் படை இருப்பதாக அறியப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புக்கு வடக்காக இரு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இரு துளைகள் (DRILL HOLES) 750 அடி ஆழத்திலேயே அடித்தளப்பாறையை அடைந்துள்ளன. மேற்குறித்த அடையற் பாறைகள் உயிர்ச் சுவடுகளைக் கொண்டுள்ள சுண்ணாம்புக் கல்லினலும், மணற்கல்லினலும் சேர்ந்கமைந்துள்ளமையினால் தரைக்கீழ் நீர்வாய்ப்புகளைப் பெருமளவுக்குக் கொண்டுள்ளது. பரிசோதனை முறையில் மேற்கொள்ளப்பட்ட 22 துளைகளிலிருந்து (3'' விட்டமுடையவை) மேற்பரப்பின் கீழ் 450 அடிக்கும் 580 அடிக்குமிடைப்பட்ட ஆழத்தில் மிகப் பரந்த ஓர் நீர் வடிநிலம் (EXTENSIVE BASIN) இருப்பதாக அறியப்பட்டுள்ளது. மேற்படையிலுள்ள பாறைப்படைகளின் அமுக்கத்தின் காரணமாக மேற்குறித்த ஆழத்திலுள்ள நீர் மேற்பரப்புவரை எழுவதையும் காணமுடிந்தது.

மேற்குறித்த பிரதேசங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் நிலநீர் பற்றி பரந்தளவிலான ஓர் நிலைமையையே தெரிவிக்கக் கூடியனவாக இருக்கின்றன. இத்தகைய ஆராய்ச்சிகள் எங்கெங்கு நிலநீர் அமைந்து காணப்படுகின்றது என்பதையும், பிரதேச ரீதியில் எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பதையுமே தெளிவு படுத்துவனவாக உள்ளன. எனினும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேலும் விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத்தகைய ஆராய்ச்சியில் தமிழீழப் பகுதியிலுள்ள ஆறுகளிலிருந்து வருடாந்தம் வெளியேற்றப்படுகின்ற நீரினளவு, வருடாந்தம் பயன்படுத்தப்படுகின்ற நீரினளவு, ஊடுவடிதலின் மூலம் நிலத்தின் கீழ் சென்றடையும் நீரினளவு, ஆவியாக்கம் ஆவியுயிர்ப்பு மூலம் இழக்கப்படுகின்ற நீரினளவு என்பனபற்றி தரவுகள் இன்றியமையாதன. இத்தகைய தரவுகளைப் பெறுவதற்கு மேலும் அதிகளவு பரிசோதனைக் கிணறுகள் அமைக்கப்படுவதும், இவற்றிலிருந்து நீர்மட்டம், நீரின் தரம் பற்றி ஒழுங்கு முறையான தரவுகள் பெறப்படுவதும் அவசியமாகும். இத்தகைய தரவுகளைப் பெறுவதன் மூலமே அவ்வப்பகுதிகளின் நிலநீர் இருப்பு பற்றி மதிப்பிடவும், இதனை வருடாந்தம் எந்தளவுக்குப் பயன்படுத்த முடியும் என்றும் அளவீடுகளை மேற்கொள்ளமுடியும்.

* * *

---

## தேசமெனும் தகமை...

(17-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைகளைஒருபொதுவேலைத்திட்டத்தில் சமர்ப்பிக்குமாயின் இந்த சர்வதேசிய வாத நிலைப்பாட்டிற்காக இடது சாரிகள் ஆளும் தேசிய இனத்தின் தொழிலாளரால் பகைக்கப்படும் நிபந்தனை எவ்விகத்திலும் எற்படாது. உண்மையில் தலையாய பிரச்சினையாகிய, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய உரிமைப் போராட்டத்தை தொழிலாள வர்க்கத்தின் சமூக விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து குரல் கொடுப்பது சமூகமாக தீர்க்கப்படுமாயின், இடதுசாரி முக்கியத்துவமும் ஆதிக்கமும் அடைவது வெற்றியளிக்க கூடுதலான சந்தர்ப்பம் ஏற்படும்.

# நவகாலனித்துவம்-4

விருத்தியும் குறை விருத்தியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை........... முதலாளித்துவத்தின் உலக ரீதியான வியாப்தி, வளர்ச்சி என்ற செயல் முறையின் விளைவுகள் தான் இவை. ஒரே சமயத்தில் இது பொருளியல் விருத்தியையும் அமைப்பியல் ரீதியான குறை விருத்தியையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது. (ஏ. ஜி. பிராங்)

'வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் (Developing Countries) என்றும் குறைந்த வளர்ச்சியுடைய நாடுகள்' (Less developed countries) என்றும் மூன்றும் உலக நாடுகள் அழைக்கப்படுகின்றன. மேற்கு நாடுகளையும் சோவியத் நாட்டையும் சேர்ந்தோர் இச் சொற்களை உபயோகிக்கின்றனர். இச் சொற்கள் சில உண்மைகளைத் திரிபுபடுத்துகின்றன. மூன்றும் உலக நாடுகள் வளர்ச்சியை நோக்கிச் செல்வதாகவும், வளர்ச்சி என்ற பாதையில் இவை ஏதோ ஒரு இடத்தில் நிற்கின்றன என்பதாகவும் இச் சொற்கள் கருத வைக்கின்றன. முதலாளித்துவ விருத்தியில் பிரிட்டனை பின்பற்றி ஏனைய நாடுகளும் செல்லும் என கூறிய மாக்சும் முதலாம் உலக யுத்தம் காலனிகளை அவற்றின் தேக்க நிலையில் இருந்து மீட்கும் எனக் கருதிய லெனினும் கூட முதலாளித்துவத்தின் முன்னேற்றப் போக்கில் நம்பிக்கை தெரிவித்தனர். அவர்களின் காலத்தில் ஏகாதியத்தியத்தின் பிடியில் மூன்றும் உலகின் வளர்ச்சி முடக்கப்படுவதை முன்கூட்டியே தெரிவிக்கும் சாத்தியம் இருக்கவில்லை. உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சி சார்பு நாடுகளின் முதலாளித்துவ வளர்ச்சியை முளையிலேயே கருக வைத்தது தன் போக்கில் விடப்பட்டிருந்தால் இந்தியா முதலாளித்துவ வளர்ச்சியை அடைந்திருக்கும் என்று போல் பறன் கூறியிருக்கிறார். இதே போல் 'பெரு' நாடும் முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கி செல்லும் சாத்தியங்களைக் கொண்டிருந்தமையை அனிபல் குய்ஜனோ என்பவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

மூன்றும் உலகநாடுகளின் 'குறைவிருத்தி' என்னும் நிலை இந் நாடுகளில் இடையிட்டுத் தோன்றிய ஒன்றே உதாரணமாக இந்தியா மொகலாயர் ஆட்சியில் 'குறைவிருத்தி' நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வந்தது என்று கூற முடியாது. 'குறைவிருத்தி' இடையிட்டுப் புகுந்த ஒன்று. உலக முதலாளித்துவ அமைப்புடன இந்தியா இணைக்கப்பட்டதன் விளைவு இது. அதாவது மேற்கின் 'விருத்தி' தான் 'குறைவிருத்தியை' உருவாக்கியது. இவ்வாறே மேற்குலகு ஒரு காலத்தில் குறைவிருத்தி நிலையில் இருந்து பின்னர் முன்னேறியது என்று கூறுவதும் தவறு. மேற்குலகம் குறைவிருத்தி என்ற நிலையில் ஒரு போதும் இருக்கவில்லை.

இன்று நவகாலனி நாடுகளில் வளர்ச்சியை நோக்கி மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் உண்மையில் உலக முதலாளித்துவத்துடன் மேன்மேலும் நவகாலனிகளைப் பிணைக்கும் முயற்சிகளே. இவை செயல்முறையில் வளர்ச்சியை அன்றி வளர்ச்சிக் குறைவையே-தங்கியிருத்தலையே-உண்டாக்கும் என்பது வெளிப்படை. நவகாலனியக் கைத் தொழில் விருத்தி ஒரு தங்கிருந்தல் தன்மையுடைய கைத் தொழில் மயமாதல் (Dependent Industrialisation) ஆகும். இது பொருளியல் சுரண்டலையும் சமமின்மையையும் அடிப்படையாகக் கொண்டது சார்பு நாடுகளில் இருந்து மைய நாடுகளை நோக்கி செல்வமும் வளங்களும் சுரண்டிச் செல்வதற்கான வழிமுறையே நவகானிய வளர்ச்சித் திட்டங்களாகும். சார்பு நாடுகளின் முதலாளித்துவ உற்பத்தி முறையின் (Peripheral Capitalist Mode of Production) குணம்சம் இதுவே.

சார்பு நாடுகள் தொடர்ந்தும் மூலப் பொருட்களையும் முதல் விளைவுப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் நிலையில் இல்லை. அவற்றின் உற்பத்திகள் மாறுகின்றன. இருந்த போதும் வர்த்தகத்தில் தங்கியிருத்தல் நிலையும் மைய நாடுகளுடன் பிணைக்கப்படுவதும் மாற்றமடையவில்லை. மூன்றும் உலகுக்குள்ளேயே தோன்றி வளரும் இந்தியா, பிரே

சில் போன்ற உப ஏகாதிபத்தியங்கள் (Sub - imperialisms) வர்த்தகத்தின் ஒரு பகுதியை மேற்கிடமிருந்து தம்வசம் பெற்றுக் கொண்டுள்ளன. இவ்வகையில் பழைய ஏகாதிபத்திய மையங்களில் இருநது பிணைப்பு பரவலாக்கப்பட்டுள்ளது.

நவகாலனிகளின் ஆளும் வர்க்கங்கள் வர்த்தகச் சம மின்மையின் விளைவால் எழும் செல்மதிநிலுவை பிரச்சினையை ஈடுகட்ட கடன்கள் உதவிகள் பெற I. M. F., I. B. R. D, அமெரிக்கா, யப்பான், மேற்கு ஜேர்மனி, ஒபெக் நாடுகள் என்பனவற்றிடம் கையேந்தி நிற்கின்றன. இந்த உதவிகளும் கடன்களும் கைத் தொழில் விருத்திக்கு மட்டுமின்றி இந் நாடுகளின் அத்தியாவசிய உணவுத் தேவைகளுக்காவும் பயன்படுத்தப்படுகின்றன. நவகாலனிய ஆதிக்கத்தின் ஒரு கருவிதான் ‘கடன்’, ‘உதவி’ என்பதும் அத்தகையதே. செரில்பெயர் (Cheryl Payer) ‘The Debt Trap’ என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார், ‘கடன் பொறி’ என்பதும் பொருள். தெரஸா ஹெய்ரர் (Therasa Hayter) ‘Aid As Imperialism’ என்று இன்னொரு நூல் எழுதியிருக்கிறார். உதவி, கடன் ஆகியவற்றின் பொய்மைகளை அம்பலப்படுத்தும்நூல்கள் இவை, இவ்வாறு பெறபபடும்கடன்களும் உதவிகளும ஒரு திட்டத்துடன் இணைக்கப்பட்டவையாக (Project-tied) இருக்கும. இந்தத் திட்டத்திற்குரிய ஒப்பந்தவேலைகளை இன்னார் செய்யவேண்டும். அதற்குரிய முதலீட்டு பொருட்களை இந்த இடத்தில் வாங்கவேண்டும். எந்தக் கப்பலில் அதுஏற்றிஇறக்கப்படும் திட்டத்தின்பயனாய் எழும் உற்பத்திப் பொருள் எந்தச் சந்தையில் எங்கே என்ன விலையில் விற்க வேண்டும் என்ற விபரங்கள் எல்லாம் திட்டத்தில் முன்கூட்டியே போடப்படும் நிபந்தனைகள். இறுதி ஆய்வில்கடன், உதவி என்பது ஒரு ஏமாற்று. சமூக நல வசதிகளைக் குறைக்கவேண்டும. (உணவு முத்திரை, கல்வி, சுகாதாரச் செலவுகளைக் கட்டுபபடுத்தல்) நாணயத்தின் மதிப்பைக் குறைத்தல் வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் திணிக்கப்படுகின்றன. ஆகவே தேசிய முதலாளித்துவம் தங்கியிருக்கும் முதலாளித்துவம் மட்டுமல்ல. நவகாலனித்துவத்தில் அது ஓடேந்தும் தண்டல் கார முதலாளித்துவமாகிவிட்டது. தேசிய சுய கௌரவத்தை அடகுவைத்து தன் சொந்த மக்களையே பட்டினிச் சாவிற்கும் வறுமைக்கும் தள்ளுகிறது.

பல்தேசிய கம்பனிகள் விருத்திக்கு அவசியமான மூலதனத்தைக் கொணடு வருகின்றன என்று கூறுவதும் ‘கடன் பொறி’ போன்ற ஏமாற்றுததான். பல்தேசியக கம்பனிகள் வெளியே கொணடு செல்லும் முதல் உள்ளே கொணடு வரும் முதலைவிடக் கூடியது. லாபம், டிவிடணட, ரோயல்டி, வர்த்தகக் குறிக்கான அறவீடு (Patent) தொழில் நுட்ப செலவுகள், நிபுணாகளின் சம்பளம், லைசென்சுகட்டணம் என்ற பெயர்களில் நானா வித வழிகளில் மூலதனம் நாட்டை விடடு வெளியேறுகிறது. ‘மாற்று விலை நிர்ணயம்’ (Transferpricing) என்று இன்னொரு தந்திரம் உண்டு. லணடனில் அல்லது நியுயோர்க்கில் உள்ள தாய் கம்பனி ஏற்றுமதி செய்யும் மூலப் பொருட்களுக்கு செயற்கையான உயர் விலைகளைக் குறிக்கும் அதே வேளை கொழும்பு அல்லது கல்கததாவில் உள்ள அதன்முகவர் வெளியே அனுபபும் உறபத்து பொருளுக்கு செயற்கையான முறையில் குறைந்த விலையைக் குறிப்பார் இவ்விதம் இருபககத்தாலும் சுரண்டல் நிகழும். அதைவிட இறங்குதுறைகள் வீதிகள், பாலங்கள் என்ற ஆதார வசதிகள் (Infra Structure) வரிச் சலுகைகள், கடன் வசதிகள, அந்நியச் செலாவணி சலுகைகள் என்ற முறைகளில் பெருந் தொகைப பணத்தை அநநியக் கம்பனிகள் உள் நாட்டு அரசுகளிடம் சுருட்டிக் கொள்கின்றன. இறுதி விளைவு மூலதனச் சேர்க்கையா அல்லது அதன் மறுதலையான மூலதன வெளியேற்றமா என்பது சிந்திக்க வேண்டியது. பொருளியலில் பெருக்கிவிளைவு (Multiplier effect) என்னும் ஒரு கருதது உணடு. ஒரு தொகை முதலீட்டைப் போட்டால் அது பல பக்க விளைவுகளை உணடாக்கி முழுப பொருளாதாரததையும் முடுக்கிவிடும் செயல் முறையைத்தான் ‘பெருக்கி விளைவு’ என்பர். வெளநாடடு மூலதனம் மூலதனத் திரட்சியையும் (Accumulation) உற்பத்திப் பெருக்கத்தையும கொணடுவரும். பொருளியல் ஒரு பெருக்கி விளைவு உண்டாகும் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் மூலதனம் வெளியேறுகையில் (Disaccumulation) பெருக்கிவிளைவு பற்றிய பேச்சுக்கே இடமில்லை. நவகாலனிகளின் உற்பத்திப் பொருட்



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

களின் விலைகள் ஏறுவதால் கூட உண்மையில் பயனில்லை. இவ் விலையேற்றம், கூடிய லாபத்தையும் கூடிய டிவிடெண்ட், ரோயல்டி, ஆகியவற்றையும் பல் தேசியக் கம்பனிகளுக்குக் கொடுப்பதால் விலையேற்றத்தின் பயன் நாட்டுக்கு வெளியே செல்கிறது.

வெளி முதலீடுகளால் ஒரு நாட்டில் செல்வங்கள் எப்படி கொள்ளை போகின்றன என்பதை மார்க்சிஸ்ட் அல்லாத ஆய்வாளர்களே புள்ளி விபரங்களோடு எடுத்துக் காட்டியுள்ளனர். பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய பொருளியல் சபையின் தலைவராக இருந்த ஹில் லாரியன். எம். ஹெனரஸ் ஒரு ஆய்வை நிகழ்த்தினர். அதன் படி

❋ 108 அமெரிக்கக் கம்பனிகளின் மொத்த முதலீடு பிலிப்பைன்சில் அமெரிக்காவின் முதலீடுகளின் 70%ஆக இருந்தது.

❋ 1954—1965 கால இடைவெளியில் இந்த 108 கம்பனிகளும் 489.7 மில்லியனில் அமெரிக்க டொலர்களை பிலிப்பைன்சில் முதலீடாகப் போட்டன.

❋ இந்த 489.7 மில்லியனில் 58.6 மில்லியன் (12%) மட்டுமே வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட மூலதனம் மிகுதி 88% பிலிப்பைன்சிலேயே பெறப்பட்டது.

❋ இதே காலத்தில் இக் கம்பனிகள் 399 மில்லியன் அமெரிக்க டொலர்களை லாபமாக வெளியே அனுப்பின.

❋ ஈட்டிய லாபத்தில் மீள முதலீடு செய்த தொகை 20.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே

நவகாலனித்துவ வளர்ச்சியின் லட்சணம் இது தான்!

-தொடரும்-

★ ★ ★

மார்கழி மாதம் 20-ஆம், 21 திகதிகளில் அரியாலை, சுதுமலைப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களில் வந்திறங்கிய ஆயுதப்படையினர் போராளிகளின் முகாம்களை முற்றுகையிட முயன்ற போது, போராளிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் தமிழீழ விடுதலைப் போராட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஒரு முக்கிய அம்சமாகும். குடாநாட்டுப் பகுதியில் நீண்ட நாட்களாகப் போர் நிறுத்தம் ஓரளவு உறுதியாக அமுல் செய்யப்பட்டு வந்தமையினால் இராணுவ ரீதியிலான தற்காலிக ஓய்வு நிலை காணப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் திடீரென புதிய யுக்திகளைக் கையாண்டு ஆயுதப்படையினரால் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், ஆயுதப்படையினர் சற்றும் எதிர்பார்க்காத வகையில் போராளிகளினால் முறியடிக்கப்பட்டது. ஆயுதப்படையினர் தங்களது சில பொருட்களைக் கைவிட்டு பின்வாங்கினர். இச் சம்பவங்கள் போராளிகளின் இராணுவ வளர்ச்சியை குறித்து நிற்கின்றன.

இது மட்டுமன்றி சுதுமலையில் ஆயுதப்படையினர் மீதான தாக்குதலின் போது விடுதலை இயக்கங்கள் இணைந்து கொண்டமை மக்களுக்கு போராட்டம் மீது நம்பிக்கையினை வலுப்படுத்தியுள்ளது. விடுதலை இயக்கங்களிடையே உள் முரண்பாடுகள் இருந்த போதிலும் பொது எதிரிக்கு எதிராக ஒன்று பட்டு போராடுவார்கள் என்பது இச் சம்பவத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இது மக்கள் மத்தியில் உறுதியினையும் போராளிகள் மத்தியில் புரிந்துணர்வையும் வளர்க்க பெரிதும் துணை புரியக்கூடியதாக அமைந்தது.

மரணம் கொடிது! மரணம் கொடிது!

# அதனிலும் கொடிது உனது மரணம்!



மலர்வு
30-10-1961

உதிர்வு
04-01-1985

## இ. ரவிசேகரன் (சுகந்தன்)

கொள்கையும், போர்த்தந்திரங்களும் உழைக்கும் வர்க்கத்தின் உயிர் நாடிகள். இவற்றை சரியான முறையில் உணர்ந்து அவற்றை மக்களோடு பொருந்த இணைப்பவர்கள் மகத்தான சாதனைகள் புரியும் புரட்சியாளர்களாக மலருகிறார்கள். ஆம்! உறுதியும், விசுவாசமும் மிக்க நண்பன் ரவிசேகரனை (சுகந்தன்) இழந்து ஒரு வருடமாகின்றது.

இறுதி மூச்சுவரை உழைக்கும் மக்களின் விடிவுக்காகவும், அவர்களின் தலைமையில் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க அயராது உழைத்த எம்மினிய நண்ப! உன்னை நாம் இழந்தோம்!

அவனுக்கேயுரித்தான அவனது இயல்பான சுபாவங்கள், உறுதிதொனிக்கும் அவனது கறுத்த முகம், திடமான மனம், போராடுவதில் இருந்த சத்திய ஆவேசம், கம்பீரமான நடை அனைத்தையும் நாம் இழந்தோம்.

தமிழீழ விடுதலை ஒன்றையே தன் நினைவிற் கொண்டு மக்களுடன் ஐக்கியப்படுவதில் சிறந்து விளங்கிய எம்மினிய நண்பன் – மக்களுக்கு அரசியலைப் போதிப்பதிலும், மக்கள் தங்கள் தலைவிதியை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு அவர்களைத் திரட்டி போரிடச் செய்வதிலும் நம்பிக்கையுடன் இந்த மண்ணிலே கால்பதித்து நின்றான். தனது பல்கலைக்கழக வாழ்க்கையின் ஆரம்ப கட்டங்களிலேயே மறுமலர்ச்சிக் கழகத்துடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கும், தளிரின் தோற்றத்திற்கும் முன் முயற்சியுடனும், குலையாத உறுதியுடனும் அயராது உழைத்தான். தளிரின் வாழ்விலும், வளர்ச்சியிலும் தன் இறுதி மூச்சு வரை பங்கேற்றான். எத்தகைய கடமைகளாயினும் உற்சாகத்துடனும், வேகமாகவும் நிறைவேற்றுவதற்கு என்றும் பின்னிற்காது; சத்திய ஆவேசத்துடனும், ஆத்ம உணர்வுடனும் விடுதலையை வென்றெடுப்பதில் துணை நின்று போராடியவனே -

வாழ்வின் வழி
வலிய
துணைவனாய் நின்றாய்
மானுடன் காண்பதே
போர்- பிறவெல்லாம்
வழியறியார் வழிக்கூத்தென
வழிகாட்ட முனைந்தாய் நீ

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

மானுடமறியா
நரவேட்டைக் கூட்டமுனை
நாற்புறமும் சூழ
அவற்றை
ஏளனமாய் ஏய்த்துவிட்ட நீ
சங்கமித்தாய் நீள்துயலில்!

ஆம்! வலிமை மிகுந்ததும், ஈடுசெய்யமுடியாததுமான ஒரு நட்பினை நாம் இழந்து விட்டோம். அவனிடமிருந்து கற்றுக்கொள்ள எமக்கும், எமது சமுதாயத்திற்கும் எவ்வளவோ இருந்தன. அத்தனையையும் சாத்தியமாற்றதாக்கிவிட்டார்கள் அந்தக் கொடியவர்கள்.

நண்ப -
மரணம் கொடிது!
மரணம் கொடிது!
அதனிலும் கொடிது
உனது மரணம்!
ஆயினும் எம்மினிய நண்பா,

உனது நினைவுகளை சிலுவையாய் சுமக்கின்றோம். சிலுவையின் கனத்தில் மேலும் மேலும் உறுதியுடன் புரட்சியை நோக்கி முன்னேறுவோம்!

(நண்பன் ரவிசேகரனின் நினைவாக எழுக - ஓ, வலிமைமிகு நாடே!' எனும் நூலில் இருந்து வாசில் பைகோவ் எழுதிய பொழுது புலர்கின்ற வரை உயிர் வாழ என்ற கதையில் ஒருபகுதியினைத் தருகின்றோம்)

........இன்னமும் படுத்துக் கொண்டிருந்ததால், அவர் வெது வெதுப்பை இழக்கத் தொடங்கினர். விறைக்கவும் தொடங்கினர். ஜெர்மானியர்கள் வருவதற்கு முன்னதாகவே, கடுங்குளிர் காற்றும், பனியும் அவர் கதையை முடித்து விடும் என்று நம்பினர். இப்பொழுது இந்த உணர்வை அவர் அதிசமாகவே உணரமுடிந்தது. குளிரை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது நடுங்கினர். அவர் விறைத்துச் சாகவிருக்கின்றார். அவருக்கு யாரும் உதவமாட்டார்கள். யாரும் ஊக்குவிக்க மாட்டார்கள். அவர் தனது கடைசி முடிவை, சந்திப்பை அடைவதற்கு எப்படி வந்தார் என்பதும் ஒருவருக்கும் தெரியாது. இதை நினைத்துப் பார்க்கையில், இவானேவ்ஸ்கி திடீரென்று பயத்தாலும், அச்சத்தாலும் பீடிக்கப்பட்டார். இது போல் தனிமையில் இருந்து முன்னர் அவர் இருந்ததேயில்லை. நெருக்கடியான சூழ்நிலைகளில யாரேனும் கூட இருந்துதான் இருக்கின்றனர். போசமான நிலையிலும் யாரேனும் இருந்திருக்கின்றனர். ஆனல் அவர் ஆங்கோ வேட்டையாடப்பட்ட காயமுற்ற விலங்கினைப் போல பனி படிந்த முடிவற்ற நிலத்தில் தனிமையில் கிடந்தார்.

உண்மையில் அவர் தண்டிக்கப்பட்டு விட்டார். இதை தெளிவாகவே உணர்ந்தார். ஆனல் தனக்காக அவர் வருத்தப்படடுக் கொள்ளவில்லை. அவரை யாராலும் காப்பாற்ற முடியாது. எந்த அதிசயமும் நடக்கும் என்று அவர் நம்பவும் இல்லை. போர்க்கால அதிசயங்கள் மக்களது நெஞ்சுகளில் குண்டு பாய்ந்து ஏற்படாது. அவர் எதையும் நம்பியிருக்கவில்லை. ஆனல் வீணகச் சாவதை அவர் விரும்பவில்லை. அதுல் மிக முக்கியமானது சாலையில் விறைத்துச் சாகாமல் இருப்பதுதான். காலை விடிந்தவுடன் முதன் முதலில வரும் ஜெர்மானியர் வரும் வரை காத்திருக்க வேண்டும். வருவது ஜெனரலாக இருந்து விட்டால் மிகவும் நல்லது. இவானேவ்ஸ்கி, ஜெனரலை அவரது அருமையான காருடன் வானத்தில் பறக்க விட்டுவிடுவார். மோசங்களில் மிகவும் மோசம், ஒரு கானவோ சில முக்கிய எஸ். எஸ் ஆட்களோ வருவது தான். அந்தக் கிராமத்திலிருந்த தலைமை நிலையம் மிகப் பெரியது போன்ற உணர்வை ஏற்படுத்தி இருந்தது. எனவே உயர்ந்த அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் அங்கு இருக்கலாம்.

ஆனல் இதற்காக அவர் விடியும் வரை உயிர் வாழ வேண்டும். இந்தக் கொடிய இரவை அவர் கடத்தியாக வேண்டும் அந்த இரவு உயிர் வாழ்வது கஷ்டமாகத் தெரிந்தது. அவர் அச்சப்படத் தொடங்கினர். சாலை குளிர்ந்து விட்டதை எண்ணிப் பயந்தார். அவரது ஒவ்வொரு அசைவுக்கும் காத்திருப்பது வெளிப்பட்ட நெஞ்சு வலியை நினைத்து வருந்தினர். இருமலை நினைத்தும், அதிகக் குருதியை இழந்ததை நினைத்தும் வருந்தினர். அந்தச் சாலையல் பெரும் ஆபத்துகள் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தன. அவைகளின்று அவர்

மீண்டாக வேண்டும். காலை வரை உயிர் வாழ வேண்டுமானல், அவைகளைத் தவிர்த்தாக வேண்டும் அல்லது சந்தித்து வெற்றி பெறவேண்டும்.

அவரது கைகள் நீண்ட நேரம் உணர்வில்லாததை உணர்ந்தார். இப் பொழுது கால்களும் உணர்விழந்து கொண்டிருப்பதை அறிந்தார். தனது காலணியுடன் குதிக்காலை அசைக்க முயன்ருர். ஆனல் எந்த விளைவும் இல்லை. பிறகு தன்னிடமிருந்து போய்க் கொண்டிருக்கும் உடல வெப்பத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தனது கால்களைச் சாலையில் உதைத்தார். அந்த இரவின் மயான அமைதியில் இவ்வாறு உதைத்தது பெரும் சப்தத்தை ஏற்படுத்தியது. பிறகு உதைவதை நிறுத்தனுர். இதனுல் அவரது கால்கள் வெப்பமடையவில்லை, ஆனுல் பெருங்களைப்பே ஏற்பட்டது. தனது நினைவை மீண்டும் இழக்கப் போகின்றேம் என்று நினைத்தார். எனவே கடைசி முயற்சியாகத் தனக்குக் கீழே இருக்கும் கை எறிகுண்டை இழுத்தார். இந்த எறிதண்டு தன் உயிரைவிட மேலானதாக அவர் உணர்ந்தார். இது இல்லாமல் அந்தச் சாலையில் இருப்பதில் எந்தவிதப் பயனும் இல்லை.

அவர் நினைவு முழுவதையும் இழந்துவிடவே, நீண்ட நேரம் அமைதியாகக் கிடந்தார். பிறகு கடும் குளிர் அவரை வாட்டுவதை உணர்ந்தார். இரவுக்கு முடிவே இல்லாதது போலக் காணப்பட்டது. அவருக்கு உதவி செய்ய விடியும் வரை ஒன்றும் இல்லை என்பதையும் அறிந்தார். ஆனுல் அதுவரை எப்படியிருப்பது? அவருக்குள் ஆத்திரமும் கவலையும் ஒரு சேர எழுந்தன. அவரது முயற்சி உண்மையிலேயே தோல்வி அடைந்து விட்டதா? அவரது முயற்சிகளெல்லாம் உண்மையிலேயே வீணுகிவிட்டனவா? அதனுல் எந்தப் பயனுமே இல்லையா?

அவர் கிட்டத்தட்ட முழுவதும் திருப்தியடைந்து விட்டார். இருப்பினும் அவை எல்லாமே தோல்வியில்தான் முடியும். ஆனுல் அவர் நிலைமையைப் புரிந்துகொள்ள மறுத்தார். மிகுந்த துன்பங்களுக்கிடையே அவர் செய்த அத்தனை காரியங்களுக்கும் மதிப்பு இருக்கிறதென்று நம்பவிரும்பினர். தனது அடையாளத்தை எங்காவது விட்டு வைக்க வேண்டும் என விரும்பினுர். ஒரு வேளை இன்று இல்லாவிட்டாலும், இந்தச் சாலையில் இல்லாவிட்டாலும், பிறகு எங்கோ ஓரிடத்தில் உண்டு என நம்பினுர். ஆனுல் உறுதியாக துன்பமயமான இவரது சாவு, ஆயிரக்கணக்கானவர்களின் துன்பமயமான சாவுக்கு ஒன்றும் குறைந்ததில்லை. இது இந்தப் போருக்கு ஏதாவது முடிவைத் தேடித்தரும். இல்லையெனில் இந்தப் பூமிக்குத் தேவையாக இருந்தோம் இந்தச் சண்டைக்குத் தேவையாக இருந்தோம், என்ற சிறிதளவு நம்பிக்கைகூட இல்லையெனில் எப்படி ஒருவர் சாவார்? பிறந்ததற்கான காரணமோ, வாழ்க்கைக்கான காரணமோ, ஏன் சண்டை செய்தோம் என்பதற்கான காரணமோ, நிச்சயம் இருந்தாக வேண்டும். இல்லையெனில் யார் தனது சூடான குருதியை பூமியில் சிந்துவார்கள்? இதற்கு ஏதாவது பொருள் இருக்க வேண்டும்.

பிறகு திடீரென்று தடையில்லாமல் ஏதாவது நடைபெறும் என்று அவர் எண்ணினுர். தனது சொந்த நாட்டிற்காக அன்றி, இந்தப் பூமியில் அடையும் துன்பம் அர்த்தமற்றதுதானே? ஒரு வீரனின் குருதி இந்த மண்ணில் சிந்தப்படுவது வீணுய்ப் போவதா? அதற்கொரு முடிவிருக்க வேண்டும்.

இலைகளையெல்லாம் அவர் காலைக்குள்ளாகச் செய்தாக வேண்டும்.

இதற்குள்ளாக பனி அவர் உடம்பை விறைக்க வைத்தது. அவரும் இதை உணர்ந்தார். மின்னி மறையும் நினைவாற்றலால், குளிர் தனது குருதியற்ற உடலை தயக்கமில்லாமல் மெதுவாக எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தார் எஞ்சியுள்ள கொஞ்ச நேரத்துக்குள்ளாகச் செய்தாக வேண்டும். ஒரு நொடிக்குப் பிறகு, அவர் கண்களைத் திறந்து பார்த்த பொழுது, அவர் பார்த்தது அவரை வியப்படைய வைத்தது. எனவே கணகளை மேலும் அகல விரித்துப் பார்த்தார். நிலத்தில் வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது. கருப்புத்திரை போல பூமியை மறைத்து நின்ற இருள், காணும்படியாக விலகிக் கொண்டிருந்தது. நிலம் இப்பொழுது

பெரிதாக வளர்ந்துவிட்டது போல் காணப் பட்டது. வானம் தெளிவாகிக் கொண்டு வந்தது. பனி படர்ந்த பிர்ச் மரங்களின் பின் பகுதிகள் தெளிவாகித் தெரிந்தன. இந்தப் பாதி வெளிச்சத்தில் பனி படிந்த சாலை நீண்ட தொலைவுக்குத் தெரிந்தது.

இவை எல்லாவற்றையும் சற்று நேரம் பார்த்து விட்டு, மீண்டும் தனது தலையைப் பனியில் கிடத்தப்போனார். அப்பொழுது திடீரென்று எதையோ பார்த்தார். முத லில் அது காராக இருக்குமோ என்று நினைத் தார். பிறகு மிகவும் கவனமாகப் பார்த்த பொழுது வண்டியாகத்தான் இருக்க வேண்டும் எனத் தோன்றியது. இந்த முயற்சியில் அவர் மிகுந்த களைப்படைந்து போகவே, குழப்பம், அச்சம், நம்பிக்கை இத்தகைய எண்ணங்களுடன் பனியில் தலை யைச் சாய்த்தார். மிகப் பெரிய கேள்வி அவரை எதிர்நோக்கி இருந்தது, அந்த வண்டியில் யார் இருப்பார்கள்? விவசாயி களா, கூட்டுப் பண்ணை விவசாயிகளா? சற்று முன்னர் வரை அவர் நம்பக்கூட இல்லை அது ஜெர்மானியர்களாக இருந்து விட்டால்...... முடியாது. இந்த அதிகாலை நேரத்தில் ஏன் ஜெர்மானியர்கள் கிரா மத்திலிருந்து, தங்களது பெரிய தலைமை நிலையத்திலிருந்து வரக்கூடாது எதை எதையோ நினைத்து அவர் குழம் பினார். அந்த இரவு முழுவதும் அவர் எதற்காகவோ காத்துக் கொண்டிருந்தார். ஆனால் நிச்சயமாக சரக்கு ஏற்றிய வண் டிக்காக இல்லை.

ஆயினும் அது ஒரு வண்டிதான். மிக அருகில் நெருங்கி வந்து கொண்டிருந்தது. நன்கு கொழுத்த இரண்டு குதிரைகள் தங்களது சிறிய வால்களை ஆட்டியபடி, நிறையச் சுமை ஏற்றப்பட்ட அந்த வண் டியை இழுத்துக் கொண்டு வந்தன. வண்டி யின் உயரே இரண்டு ஜெர்மானியர் இருந் தனர். கடிவாளத்தைலேசாக ஆட்டிக் கொண்டு மெதுவாகப் பேசிக்கொண்டு வந்தார்கள்.

இவானேவ்ஸ்கி அப்படியே குனிந்து அங்கு கிடந்த வணடித்தடத்தில் படுத்து கொண்டார். அந்தக் காட்சியைப் பார்த்த மாத்திரத்தில் அவர் பதறிப் போனார். இத்தகைய துரதிருஷ்டம் வருமென்று அவர் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை. பல முயற்சிகளுக்கும், சித்ரவதைகளுக்குப் பிறகும் பல சாவுகளுக்குப் பிறகும் இவா னேவ்ஸ்கி, ஒரு வணடி நிறைய வரும் ஆயுதங்களை அடித்துத் தகர்க்க முடியும் என்று நம்பினர் ஒரு ஜெனரலோ, அட் மிரலோ கர்னலோ நினைத்துப் பார்க்காத படி இவரை நோக்கி இரண்டு வண்டி யோட்டிகள், ஒரு வண்டி நிறைய ஆயுதங் களோடு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும், அவருக்கு வேறு எந்த மாற்று வழியும் இல்லை என்பது தெளிவாகி விட்டது. ஒரு போர் வீரனுகக் கடமை யாற்றுவதன் மூலம் அவர் தனது நாட்டுக்கு தனது இறுதிக் காணிக்கையைச் செலுத்திக் கொண்டிருந்தார். சிலருக்கு பெரியவற்றைச் செய்யும் வாய்ப்புக் கிட்டலாம். அங்கு குணக்கற்ற பிடிவாதக்காரப் பிரஷ்யன் தள பதிகள், கொடுமைக்கார எஸ் எஸ் ஆட் கள் இருக்கலாம். ஆனல் இவருக்கு முன்போ ஒரு ஜோடி வண்டி ஓட்டிகள்; அவ ரது கடைசிச் சண்டையில் இறங்குவது அவரைப் பொருத்த விஷயம். முடிவை முன்னரே அறிந்த முடிவுடைய போராகத் தான் இருக்கும். மேலும் இவர் அவர்க ளோடு பொருதியாக வேண்டும். தனக்காக வேண்டி பிவோவரோவுக்காக, ஜெலுட்யாக், குட் ரயாவெட்ஸ், மற்றும் போர் முனையைத் தாண்டிச் செல்லும்போது சொல்லப்பட்ட இவர்களுக்காக அவர் சண்டை செய்தாக வேண்டும். கேப்டன் வோலோக் மற்றும் அவரது சாரணர்களுக்காக மற்றும் ஏராள மானவர்களுக்காக. ஆகவே அவர் கை வெடிகுண்டின் கடினமான வளையத்தை தனது பற்களால் இழுத்தார்.

வண்டி மெதுவாக வந்து கொண்டிருந் தது. வண்டி ஓட்டிகள் ஏற்கனவே இதைப் பார்த்து விட்டது போலஇருந்தது. பெரிய கழுத்துப் பட்டையுடைய சட்டையணிந்த ஜெர்மானியன் பக்க வாட்டில் அமர்ந்து கொண்டு. மற்றவனிடம் இன்னும் எதைப் பற்றியோ பேசிக்கொண்டிருந்தான். அவ னது தொப்பி காதுவரை இழுத்துவிடப் பட்டிருந்தது. குதிரைகளை ஓட்டி வந்தவன், சாலை நெருங்கிவிட்டது என்பதைப் பார்த்த படி வந்தான். இவானேவ்ஸ்கி வெடி குண்டை தனது வயிற்றுக்குக் கீழே போட் டபடி இருந்தார். அசையாமல் இருக்க முயற்சித்தார். எனவே மூச்சைப் பிடித்துக்

கொண்டு இருந்தார். கண்களை மூடியபடி கிடந்தார். அவர்கள் இவரைப் பார்ப்பார் களேயானால் இறந்து விட்டாரென்று நினைத்து இன்னும் நெருக்கமாக வரலாம் என நினைத்தார்.

ஆனால் அவர்கள் நெருக்கமாக வர வில்லை. மாறாக இவரிடமிருந்து இருபது எட்டுகளுக்கு அப்பால் நின்று, அவரிடத் தில் ஏதோசத்தம் போட்டுச் சொன்னார்கள். அவர் முன்னர் போல அசைவற்று இருந் தார். பதில் ஏதும் பேசவில்லை. சரியாக மூடப்படாத தனது கண்கள் வழியாக அவர்களைக் கவனித்தார். முன்னர் எப் போதும் இல்லாதவாறு, இரவு முழுவதும் தனக்குக்கீழே கிடக்கின்ற கைவெடி குண் டுகளை அவரால் துல்லியமாக உணர முடிந்தது

எந்த விதமான பதிலுக்கும் காத்திரா மல், ஜெர்மானியர்களில் ஒருவன் துப்பாக்கி யைப் பிடித்தபடி வண்டியிலிருந்து சாலையில் குதித்தான். மற்றவன் எங்கிருந்தானோ அப்படியே நின்றான். இவானேவ்ஸ்கி ஏமாற்றத்தால் முணு முணுத்தார். அவர் எதிர்பார்த்ததற்கும் மாறாக,எல்லாமே மிக மோசமாக மாறிக் கொண்டு வந்தன. அவர்களில் ஒருவன் மட்டும் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தான். லெப்டி னெண்ட் கண்ணிற்கு முன்னால் உலகம் இருண்டு காணப்பட்டது. சாலையின் ஒரு புறத்தில் பிர்ச் மரங்கள் நின்றன. ஆனாலும் இவர் தன்னைத்தானே வேகப்படுத்திக் கொண்டு உணர்வோடு காத்துக் கொண்டி ருந்தார்.

ஜெர்மானியன் தனது துப்பாக்கியை இயக்கத் தொடங்கினான். ஏதோ ஒரு வகைக் கூச்சலிட்டான். அவனது நீண்ட மேல் சட்டை சாலையில் இவானேவ்ஸ்கியை நோக்கி வந்தது. தனது துப்பாக்கியைச் சுடும் நிலையில் தயாராக வைத்திருந்தான் துப்பாக்கியின் பின்புறம் அவனது தோள் பட்டையில் அழுத்தியபடி இருந்தது. இவானேவ்ஸ்கி மெதுவாக வெடிகுண்டு சுடும் இயந்திரத்தை நிறுத்தினார். அமை தியாகப் பின் வாங்கிக் கொண்டிருந்தார். அவர் வேண்டிக் கொண்டார்; "வா...... இப்போது ...வா" அவர் காத்திருந்தார் மிகப்பெரிய போராட்டத்தின் சிறு அங்க மாக அவர் இருந்தார் இவரால் இப்பொ ழுது வேறு எதுவும் செய்ய முடியாது. வெடிகுண்டை அவரால் தூக்கி எறிய முடியாது. குண்டை வீசி எறிந்த ஜெர்மா னியனோடு தானும் அழிந்து போவது மட் டுந்தான் முடியும்.

இந்த வண்டியோட்டி துணிச்சல் மிக்கவனாகத் தெரியவில்லை. மிகுந்த எச்சரிக் கையோடு நெருங்கி வந்தான். எந்த நேர த்திலும் திரும்பி ஓடிவிடுபவனைப் போல் காணப்பட்டான். ஆனாலும் மிக நெருக் கமாக வந்து கொண்டிருந்தான். இவா னேவ்ஸ்கி, சவரம் செய்யப்படாத, தூக்கக் கலக்கத்தில் இருக்கும் தன் முகத்தைத் தட விப் பார்த்துக் கொண்டார். அவரது மேல் சட்டைப் பொத்தான்கள் பனியால் குளிர்ந் திருந்தன. இவானேவ்ஸ்கிக்கு சற்று தொலைவு தள்ளி அவன் திரும்பவும் ஏதோ சப்தம் போட்டு விட்டு நின்றான். அடுத்த வினாடி லெப்டினெண்ட் கிட்டத்தட்ட மனம் உடை ந்தலை கத்திவிட்டார். ஜெர்மானியன் தனது துப்பாக்கியைத் தோளுக்கு உயர்த்தி விட்டதைப் பார்த்தார். இதைச் செய்தது அருவருப்பாகவே இருந்தது. துப்பாக்கிக் குழாய் பக்கத்திற்குப்பக்கம் நகர்ந்து கொண்டிருந்தது. வண்டியிலிருந்த அவன் கூட்டாளி இவனிடம் சப்தம் போட்டு எதையோ சொன்னான். ஏதோ அறிவுரை சொல்வது போலிருந்தது முன்னர் போல இவானேவ்ஸ்கி படுத்திருந்தார். தன்னைக் கொல்லவிருப்பவனை, கண்களை அகல விரித் தபடி பார்த்தார். துயர மிகுதியால் அவர் கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடியது. இன்று காலைவரை இவர் காத்திருந்தார். தனது ஜெர்மானியர்களையும் சந்தித்து விட்டார். எல்லாமே மிக மோசமாக, நோக்கமில்லாமல், கேவலமாக முடியப் போகிறது. நிச்சயமாக இம்மாதிரி முடியக் கூடாது. மேலும் செய்வதற்கு என்ன இருக்கிறது? அவர் எழுந்து நிற்பதா? கத்துவதா? கைகளை உயர்த்தி நிற்பதா? அல்லது அமைதியாக மரியாதையோடு இந்தக் கடைசி குண்டை ஏற்றுக்கொண்டு இந்த உலகத்தை விட்டே நிரந்தரமாக மறைந்து விடுவதா?

ஒருவேளை இவர் மறைந்து போகலாம். இன்னும் சில வினாடிகளே உள்ளன. அதற்

குப் பிறகு நிரந்தரமான அமைதி பின் தொடர்ந்து வரும். இந்தச் சூழ்நிலையில், அது எல்லாத் துன்பங்களிலிருந்தும் அவருக்கு விடுதலையளித்து விடும். மற்றவர்கள் உயிரோடு இருப்பார்கள். வெற்றி அவர்களுடையது தான். அவர்கள்தான் பசுமையான மகிழ்ச்சியான இந்த நாட்டைக் கட்டப் போகிருர்கள். அவர்கள் சுவாசப்பை நிறைய சுவாசிக்க இருக்கிருர்கள். வேலை செய்யவும், அன்பு பாராட்டவும் இருக்கிருர்கள். ஆனல், அவர்களது சிறந்த எதிர்காலமானது, இருபத்திரெண்டு வயதுடைய கமாண்டர் லெப்டினண்ட் இவானேவ்ஸ்கி இறந்து கிடக்கும் இந்தச் சாலையின் மேல் இருக்கிறது என்பது யாருக்குத் தெரியும்.

இல்லை, அவர் எழுந்திருக்கவில்லை; அவருக்குத் தெப்பிலை. மேலும் அவர் சப்தம் போடவில்லை. ஒரு வேளை அவர் நினைத்திருந்தால் இதைச் செய்திருக்கலாம். நல்ல அமைதி ஒரு குண்டடியால் கலைந்தபோது அவர் நடுங்கினர். மேலும் மற்றுமொரு தோட்டா குருதி படிந்த அவர் உடலைத் துளைத்துக்கொண்டு சென்றது. அது அவரது தோளில் தாக்கியது, கிட்டத்தட்ட அவரது தோள்பட்டை எலும்பு நொறுங்கிப் போனது. அவர் எழுந்திருக்கவுமில்லை, முனங்கவும் இல்லை. கடைசி முயற்சியாக அவர் பற்களைச் சேர்த்தபடி மூடிக்கொண்டார். கடைசியாக தனது கண்களை மூடிக் கொண்டார். அவரது கடைசி நம்பிக்கையுடன், நெருங்கி வந்த காலடி ஓசையைக் கேட்டார். எல்லாம் போய்விட்டது என்ற நம்பிக்கையில் அல்ல; இன்னமும் ஏதாவது செய்ய முடியாதா என்ற நம்பிக்கையில்தான், மிகச் சிறு வாய்ப்புகள் இன்னமும் இருந்தன. மெதுவாக, மிகுந்த கவனத்துடன், தனது உடலில் புதிதாகப் புகுந்துள்ள வலியையும் தாங்கிக்கொண்டு, தனது பக்கவாட்டில் திரும்பி, தனக்குக் கீழே கிடக்கும் வெடிகுண்டை விலக்கினர். அவர் அதையெடுக்கவும், நடை அவருக்குப் பக்கத்தில் சாலையில் நின்றது. பக்கவாட்டில் துப்பாக்கிக் குண்டு துளைத்த வலி அதிகமாக இருந்தது. ஒரு பெரிய வெடிகுண்டு வெடிப்பு திடீரென்று ஏற்பட்டது. ஜெர்மானியன் ஓங்கிக் சத்தியவாறு ஓடத் தொடங்கினன். இரண்டு கால்கள் தரையில் அடித்துக் கொள்வதை இவனேவ்ஸ்கி இப்பொழுது தெளிவாக கேட்க முடிந்தது. வேறொன்றுமில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு, புழுதியும், பனியும் அடங்கிய பிறகு. அவன் சாலையில் காணப்படவில்லை. சாலையில் வண்டித் தடத்திலிருந்த பள்ளத்தில் சிறு புகை வந்து கொண்டிருந்தது. அதற்குள்ளாக முகம் தரையில் புதைந்தபடி ஓர் உருவம் படுத்திருந்தது. அவர் அணிந்திருந்த மேல் சட்டை மேலாக நீட்டிக்கொண்டிருந்தது. அந்த ஜெர்மானியர் வெடி வெடித்த போது அங்கு தூக்கி எறியப்பட்டவர். வண்டியும் அவர் பக்கமாகச் சாய்ந்து கிடந்தது. அந்தப் பனி படிந்த நிலம் முழுவதும் சிதறல்கள் கிடந்தன. வண்டியை இழுத்து வந்து குதிரை எழுந்து நிற்பதற்கு மிகுந்த முயற்சி செய்து கொண்டிருந்தது உயிருடன் இருந்த வண்டியோட்டி அச்சமுற்று போனர். தனது துப்பாக்கியை வண்டிக்குப் பக்கத்திலேயே போட்டுவிட்டு கிராமத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்.

★ ★ ★

> "அநேக நாடுகளில் ஒரே சமயத்தில் புரட்சி நடப்பதென்பது, அபூர்வமாக நடக்கக்கூடியது. ஒரு நாட்டில் மட்டும் நடப்பதுதான் சாதாரணமாக நிகழக்கூடியது. ஆகவே ஒரு நாட்டில் சுரண்டல்காரர்கள் முறியடிக்கப்பட்டால், அவர்கள் முறியடிக்கப்பட்ட பிறகும் கூட சுரண்டப்பட்டவர்களை விட அதிக பலமுடையவர்களாகவே இருக்கிருர்கள்"
>
> -லெனின்-

# இவன் எங்கள் நண்பன்!



சு. ஸ்ரீஸ்கந்தராஜா

படைப்பு:-
10-06-1957

பறிப்பு:-
24-12-1984

மெலிந்த தோற்றம், தலையை ஒரு பக்கம் சாய்த்த வண்ணம் உறுதியான நடை, விவேகமும் வேகமும் கொண்ட செயற்றிறன், கம்பீரமான ஆளுமை இவற்றுடன் எம் மத்தியில் எம்முடன் இணைந்து இயங்கிய சு. ஸ்ரீயை (காண்டீபன்) இழந்து ஐ வருடம் முடிந்துவிட்டது.

யாழ் - பல்கலைக்கழக மாணவரவைத் தலைவராக இருந்து மாணவர்களின் பிரச்சினைகளையும் மக்களின் பிரச்சினைகளையும் எதிர் கொண்டு அவற்றை செவ்வனே தீர்த்து வைத்தவன். இவன் அரச பயங்கரவாதம் கால் பதிந்த தமிழீழப்பகுதிகளில் இவனது கால்களும் பதியத் தவறுவதேயில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னின்றான். 84ம் ஆண்டு மாசி மாதம் தமிழீழப் பகுதியெங்கும் தமிழ் பேசும் மக்கள் கடும வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட போது, அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு இவன் வகித்த பங்கு என்றும் எமது நினைவலைகளில் தவழும்.

மாணவர் போராட்டங்களை நெறிப்படுத்தி அவற்றை வழி நடத்துவதில் இவனுக்கு நிகர் இவனே. குறிப்பாக தென்னிலங்கையிலிருந்து இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களில் இவனது பங்கு ஆழமானது. போராட்டங்களின் போது உறுதியுடன் தலைமை வகிப்பது இவனது தனிச்சிறப்பு.

இவன் பதிவுத் திருமணம் செய்து கொண்டவன். திருமண வாழ்க்கை தனது இலட்சியப் பாதைக்கு இடையூறாக அமையலாம் என்று எண்ணியோ அல்லது தனது வாழ்க்கை தாயக மீட்பிற்காக விரைவில் முடியப் போகின்றது என்பதை உணர்ந்தவனாகவோ, திருமணம் என்பதை

ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தான் இவனது தந்தை இது பற்றி இவனிடம் பேசும் போது பேச்சை வேறு திசைக்குத் திருப்பிக் கொள்வான். ஆனால் இவனது மனைவியிடம் இவன் ஆழ்ந்த அன்பு வைத்திருந்தான். இவனோடு நெருங்கிப் பழகியவர்களால் இதை உணரக் கூடியதாகவிருந்தது.

பல்கலைக்கழக வாழ்க்கையின் பின் ஆயுதம் தாங்கிய போராளியாகத் தனது சொந்த மண்ணாகிய வன்னி மண்ணில் மக்களோடு இணைந்து கொண்டான். மக்களின் அவலங்களைத் தாங்கி அவர்களை அணிதிரட்டினான். சமதர்மத் தமிழீழமே உழைக்கும் மக்களின் விடிவுக்கு வழி என உறுதியாகக் கூறிக் கொள்வான். தனது பணியில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டு வரும் வேளையில்' ஒரு நாள் திடீரென தன்னையும் தனது நண்பர்களையும் சூழ்ந்து கொண்ட இராணுவத்துடனான நேரடி மோதலில் ஸ்ரீ எம்மை விட்டுப் பிரிந்தான். ஸ்ரீ எம்மை விட்டுப்பிரிந்த போதிலும் அவனது உறுதி, இலட்சியப்பற்று. மனிதநேயம், விவேகம் , வேகம் ஆகியன என்றும் எம்மை வழிநடத்தும்.

"ஒரு அரசியல் கட்சி எந்தளவிற்கு நேர்மையாக உள்ளது என்பதை தீர்மானிப்பதற்கு வழியென்ன? எந்தளவிற்கு தனது வர்க்கத்துக்கும், பாட்டாளி மக்களுக்கும், தனது கடமைகளை நடைமுறையில் நிறைவேற்றுகின்றது என்பதையும் தீர்மானிப்பதற்கு வழியென்ன? அந்தக் கட்சி தனது சொந்த தவறுகளை பற்றி கொள்கிற கண்ணோட்டம் என்னவென்று பார்ப்பது தான் வழி. பல மிகவும் முக்கியமான நிச்சயமான வழிகளில் இது ஒன்றாகும். ஒரு குற்றத்தை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்வதும் குற்றம் புரிந்ததின் காரணங்களை ஆராய்ந்து நிச்சயித்துக் கொள்வதும் எந்த நிலைமைகளின் பால் அது முளைத்து வளர்ந்தது என்பதை பகுத்தாராய்வதும் அதை திருத்துவதற்குள்ள வழிகளைப்பற்றி தீரவிவாதிப்பதும் ஒரு உண்மையான கட்சிக்கு அடையாளம்; தனது கடமைகளை இந்த வழியில் தான் அது நிறைவேற்ற வேண்டும்; முதலில் தனது வர்க்கத்திற்கும் அதற்கப்புறம் மக்கள் திரளுக்கும் இந்த வழியில் தான் அது போதனையையும், பயிற்சியையும் தரவேண்டும்.

—லெனின்—

# பெண் விடுதலையும் கலாச்சாரமும்

—அம்மான்—

விடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பின் அவசியம் இன்று எல்லோராலும் உணரப்பட்டு வருகின்றது. தமிழீழப் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றுவதற்கு சமூகத்தின் ஒடுக்குமுறைகள் தடையாக அமைகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றும் பெண்கள் சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. ஆனால் இவற்றையெல்லாம் மீறி புரட்சிகரப் பெண்கள் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு வருகின்றனர். பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்குக் கலாச்சாரமும் துணை போகின்றது. ஆனால் சமூகத்தின் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக போர்முரசு கொட்டவேண்டிய அவசியத் தேவை இன்றையகலாச்சார வெளிப்பாடுகளுக்குஉண்டு. பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எவ்வாறு கலாச்சாரம் துணை போயிற்று என்பது குறித்தும் பெண் விடுதலையில் கலாச்சார வெளிப்பாடுகள் வகிக்க வேண்டிய பங்கு குறித்தும் மேலோட்டமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழீழப் பெண்கள் இன்று இரு வகையான ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவையாவன

(1) தேசிய ஒடுக்குமுறை

(2) சமூக ஒடுக்கு முறை

தேசிய ஒடுக்குமுறையென்பது பெண்கள் மீதான தனித்த ஒடுக்கு முறையல்ல. தமிழ் இனத்தின் மீது மேற் கொள்ளப்பட்ட ஒடுக்குமுறை தமிழ் இனத்தின் அங்கமாகிய தமிழீழப் பெண்கள் மீதும் சுமத்தப்படுகின்றது. ஆனால் சமூகத்தின் ஆண் ஆதிக்கத்தின் காரணமாய் சில விடயங்களில் பெண்கள் கூடுதலாக பாதிப்புக்குள்ளானார்கள். உதாரணமாக தொழில் ரீதியான தேசிய ஒடுக்குமுறை பெண்களைக் கூடுதலாகப் பாதித்தது. இன்று ஆண், பெண் விகிதாசாரம் காரணமாக பெண்கள் கூடுதலான தொழில் வாய்ப்பினைப் பெறக்கூடியதாக இருந்தாலும் நடைமுறையில் பல பெண்கள் இவ் ஒடுக்குமுறைக்குப் பலியானதைக் காண்கிறோம்.

தேசிய ஒடுக்குமுறையின் வெளிப்பாடாய் பெண்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற பலாத்காரம், பெண்கள் எதிர்நோக்கும் அடுத்த பிரச்சினையாகும்; இச் சமூக அமைப்பில் இவ் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் தாமாகவே தலைகுனிந்து கொள்கின்றனர். தங்களைப் பாவப்பட்ட ஜென்மங்களாக நினைத்துக் கொள்கின்றனர். சிலர் தற்கொலை செய்து விடுகின்றனர். அதே சமயம் சமூகமும் இவர்களை ஒரு வேறுபட்ட பார்வையிலேயே நோக்குகின்றது இவற்றிற்கு கலை இலக்கியங்களும் காரணமாக அமைகின்றன. எமது மத்தியிலே காணப்படுகின்ற இலக்கிய வெளிப்பாடுகள், நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவை பெண்களை விஞ்ஞான பூர்வமாக சிந்திக்க அனுமதியாது பெண்களை ஒடுக்குகின்ற கருத்துக்களை அவர்கள் மத்தியில் ஊட்டி விடுகின்றன.

சமூக ஒடுக்குமுறையானது பல வடிவங்களில் பெண்கள் மீது சுமத்தப்படுகின்றது வீட்டு ஊழியமாகப் பெண் நடாத்தப் படுகின்றாள் சகலவீட்டு வேலைக்கும் சமையலுக்கும் தான் பெண் பொருத்தமானவள் என்றகருத்து சமூகத்தில் நிலவுகின்றது. ''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்'' ''கணவனே கண் கண்ட தெய்வம்' போன்ற கருத்துக்கள் பெண்களிடம் ஊட்டப்பட்டிருப்பதனால் கணவனால் மேற்கொள்ளப்படும் எந்த அடக்கு முறைக்கும் ஆக்கிரமிப்பக்கும் எதிராக குரல் எழுப்ப முடியாத நிலையில் பெண்கள் வாழ்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ்

அடக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்பும் பெண்கள் 'அடங்காப் பிடாரி' களாக சமூகத்தில் கணிக்கப்படுகிறார்கள். இந்த ரீதியில் பெண்கள் ஒடுக்கப்படுவதற்கு கலை இலக்கியங்கள் பெருமளவு துணை போகின்றன. நியாயமான உரிமைக்காக குரலெழுப்பிகணவனைப் பிரியும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் பெண்களை வாழாவெட்டிகளாக கலை, இலக்கியங்கள் வெளிப்படுத்தி பெண்களை ஆணாதிக்கத்தினுள் அமுக்கிவிடுகின்றன.

எமது சமூகத்தில் சீதனம் பெண்களை ஒடுக்குகின்ற காரணிகளில் ஒன்றாக அமைகின்றது. இந் நடைமுறைக் கூடாக பெண்கள் ஒரு சுமையாகக் கருதப்படுகின்ற தன்மை சமூகத்தில் காணப்படுகிறது. மேலும் கூலி அடிப்படையில் பெண்கள் சுரண்டப்படுதல், கல்வி கற்கும் வாய்ப்பு இளமையிலேயே நசுக்கப்படுதல்போன்றவை பெண்கள் மீது சுமத்தப்படும் ஒடுக்குமுறைகளில் சிலவாகும். சுருங்கக் கூறின் பெண்கள் சமூகக் கருத்தோட்டத்தாலும் பொருளாதார சமூக நடவடிக்கைகளாலும் ஒடுக்கு முறைக்குள்ளாகிறார்கள். சமூகக் கருத்தோட்டத்தினூடாக பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்கு முறைகளுக்கு இன்றைய பெரும் பாலான கலை, இலக்கியங்கள் துணை போகின்றன.

பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்குக் காரணம் ஆண்களா அல்லது பெண்களா என்ற விதத்தில் பல கருத்து மோதல்கள் இடம் பெறுகின்றன. பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு இச் சமூக அமைப்புத் தான் காரணம் என்பதனை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும் சமூக அமைப்பில் காணப்பட்ட, காணப்படுகின்ற சொத்துக்களின் தனியுடமை காரணமாக கூடுதலான சொத்துக்களை ஆதிக்கத்துக்குட்படுத்திய ஆண்கள், பெண்களையும் தங்களின் ஆதிக்கத்திற்குட்படுத்திக் கொண்டனர். ஆண்களின் கட்டுப் பாட்டில் இருந்த சகல நிறுவனங்களும் ஆண் ஆதிக்கத்தினை நிலை நிறுத்தும் மரபுகளையும் கலாச்சாரங்களையும் உருவாக்கின. தனியுடமையினைப்பேணுகின்ற நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சமுதாயங்களை அடியோடு மாற்றும் வரை பெண்கள் மீதான ஒடுக்குமுறையினை ஒழிப்பது முடியாத காரியமே.

பெண் விடுதலை குறித்து பல குழப்பமான கருத்துக்கள் நிலவுகின்றன. பெண் விடுதலை பற்றிய சரியான கருத்துத் தெளிவின்மையால் சிலர் தவறான பாதையில் செல்கின்றனர் பெண் விடுதலை என்பது ஆண்கள் நடந்து கொள்வது போல் பெண்களும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையோ அல்லது பெண்கள் ஆண்களைவிட மேலாதிக்கம் பெற்றவர்களாக வரவேண்டும் என்பதையோ குறித்து நிற்காது. மாறாக ஒரு ஆண் தனது ஆளுமைகளை வெளிப்படுத்த சமூகத்தால் வழங்கப்படும் சகல சந்தர்ப்பங்களும் எவ்விதப்பாகுபாடுமின்றி ஒவ்வொரு பெண்ணும் தங்களது ஆளுமைகளை வெளிப்படுத்த வழங்கப்படும் அதேவேளை பொருளாதார ரீதியிலும் பெண்கள் எவ்வித சுரண்டலுமற்றவர்களாக வாழுகின்ற ஒரு நிலையினைக் குறித்து நிற்கும்.

பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு கலை இலக்கியங்கள் இரண்டு வழிகளில் துணை போகின்றன. பெண்களை ஒடுக்கி ஆண் மேலாதிக்கத்தினை நிலை நாட்டுகின்ற வகையிலே கருத்துக்களை உள்ளடக்கிப் படைக்கப்படும் கலை, இலக்கியங்கள் முதலாவது வழி வகையினைச் சாரும். இத்தகைய படைப்புக்கள் பெண்கள் இயற்கையாகவே மென்மையான குணம்சத்தைக் கொண்டவர்கள் என்றும் ஆணின் துணையின்றி பெண்கள் வாழவே முடியாது என்றும் கருத்துக்களை வெளிப்படுத்திஅவற்றைஆழமாகபெண்கள் மனதில் பதித்துவிடுவதனூடாக பெண்கள் தாங்களாகவே ஆண் ஆதிக்கத்திற்கு அடங்கிப்போவதற்கு காரணமாக அமைகின்றன. பெண்கள் பொருளாதார ரீதியில் ஆண்களிடம் தங்கியிருக்கவேண்டிய நிலமை காணப்படுவது. பெண்கள் தாமாகவே ஆண் ஆதிக்கத்திற்கு அடங்கிப் போவதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்த போதிலும் இத்தகைய கலை, இலக்கியங்களினூடாக பெண்கள் மத்தியில் ஊட்டப்படும் பெண் அடிமைத்தனக் கருத்துக்களால் ஏற்படும் பாதிப்பும் பெண்கள் தாமாகவே ஆண் ஆதிக்கத்திற்கு அடங்கி விடுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

சில கலாச்சார வெளிப்பாடுகள் பெண் விடுதலை தொடர்பான கருத்தினை வெளிப்படுத்த முனைந்து அலற்றை தவறானமுறை

யில் வெளிப்படுத்துவதனூடாக பெண் ஒடுக்கு முறைக்குத் துணை போதல் இரண்டாவது வகையாகும். பெண் விடுதலை தொடர்பான சில கலை இலக்கியப் படைப்புக்கள் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு காரணம் சமூக அமைப்பு என்பதனை வலியுறுத்தி, புதிய சமூக அமைப்பினை உருவாக்குவதன் மூலமாகவே ஆண் ஆதிக்கத்தை அழிக்கமுடியும் என்பதனைத் தெளிவுபடுத்தாமல் பெண் ஒடுக்குமுறைக்கு ஆண்களே காரணம் என்னும் கருத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்து விடுகின்றன. இத் தவறான கருத் தோட்டத்தினால் பெண் விடுதலை பற்றிய கருத்தானது ஆண் எதிர்ப்பு (Anti-Male) வாதமாக சிறுமைப்படுத்தப் பட்டுவிடுகின்றது. இத்தகைய கருத்துக்கள் பெண்கள் மத்தியில் ஊடுருவுமானால் பெண் ஒடுக்குமுறைக்கு துணை போகின்ற ஆண் ஆதிக்கத்திற்கும் ஆண் ஆதிக்கத்திற்கு காரணமான சமூக அமைப்பிற்கும் எதிராக மேற் கொள்ளப்பட வேண்டிய போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டமாக வெளிக் கொணரப்பட்டுவிடக் கூடிய நிலை உருவாகும் இத்தகைய நிலை பெண் விடுதலைக்காகக் குரலெழுப்புகின்ற ஆண்களையும் தனிமைப்படுத்துவதுடன் பெண் விடுதலை தொடர்பான சரியான கருத்தோட்டத்தினையும் பாதித்து விடுகின்றது எனவே பெண் விடுதலை தொடர்பாக படைக்கப்படுகின்ற கலை, இலக்கியங்கள் சரியான நிலைப்பாட்டினை கொண்டிருக்காத பட்சத்தில் பெண் விடுதலை பற்றிய கருத்துத் தெளிவின்மையினை உருவாக்கி பெண்களை தவறான வழியில் வழிநடாத்துவதற்கு காலாக அமைவதனூடாக பெண்கள் மீதான ஒடுக்கு முறைக்கு துணைபோகின்றன.

இன்று தமிழீழப் பகுதிகளில் பரவலாக கலாச்சார நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பெண் விடுதலை பற்றிய தெளிவான கருத்துக்களை உள்ளடக்கியதான கலாச்சார வெளிப்பாடுகள் மிகவும் அரிதாகவே நடாத்தப்படுகின்றன. பெண்கள் பற்றிய சமூகக் கருத்தோட்டத்தினை விஞ்ஞான பூர்வமாக்குவதற்கு சரியான கருத்துத்தெளிவுடைய, கலைத்துவம் மிக்க கலைப்படைப்புக்கள் பெரும் பங்கினை வகிக்கமுடியும். எனவே பெண் விடுதலை தொடர்பான போராட்டங்கள் கலாச்சார வெளிப்பாடுகளினூடாகவும் மேற்கொள்ளப் படவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

பெண் விடுதலைக்காகப் போராடும் எம்மவர்களில் சிலர் சமூகத்தினைப் பற்றி எவ்வித கவலையுமற்று. சமூகத்தில் இருந்து விலகிநின்று செயற்படுவதனை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. எம்மைப் பொறுத்த வரையில் நாம் சரியாக நடந்து கொள்கிறோம் என இவர்கள் காரணம் கூறுகிறார்கள். இவர்களுடைய உணர்வுகள் சத்தியமானவையாக இருந்தாலும் சமூகத்துடன் இணைந்த விதத்திலே போராட்டங்களை மேற்கொள்வதே ஒப்பீட்டளவில் நன்மை பயக்கும். சமூகத்தில் இருந்து விலகி நிற்பதனால் பெண் விடுதலை பற்றிய கருத் தோட்டமே சமூகத்தில் இருந்து அந்நியப் படக் கூடிய அபாயம் உண்டென்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பெண் விடுதலையானது தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்துடன் இணைந்த ஒரு சமூகப் புரட்சியின் மூலம் தனியுடமை அழிக்கப்படுவதனூடாக ஆண் ஆதிக்கம் நீக்கப்படும் போதே அடையப்பட முடியும். தமிழீழத் தேசிய விடுதலை அடையப்பெறாமல் சமூகப் புரட்சி என்பது சாத்தியமற்றது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் உரியமுறையில் நெறிப்படுத்தப்படும் போதே சமூகப்புரட்சிக்கான அடித்தளம அமைக்கப்பட முடியும். எனவே பெண்கள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு போராட்டத்தை சரியான வழியில் நெறிப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்க வேண்டியது அத்தியாவசியமானது. இன்று புரட்சிகரப் பெண்கள் தேசிய விடுதலை இயக்கங்களோடு தம்மை இணைத்துக் கொள்வதனை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. தேசிய விடுதலை இயக்கங்களில் பெண்கள் அங்கத்துவம் வகிக்கும் அதேவேளை தனித்துவமான பெண்கள் அமைப்பு ஒன்றினூடாக பெண்கள் ஸ்தாபனமயப்படுவது பெண்களுடைய உரிமைக்குரலை ஒரே குரலாக வெளிப்படுத்த உறுதுணையாக அமையும். 'பெண்களின் விடுதலைக்கான போரில் வெற்றி பெறாத பாட்டாளி வர்க்கம் பூரண விடுதலையைப் பெற்று விட முடியாது'' என்ற லெனினின் கூற்றுக் கிணங்க பெண் விடுதலைக்காக உழைக்க வேண்டிய அவசியம் புரட்சிகரச் சக்திகளுக்கு உள்ளது. பிற்போக்கு கலை இலக்கியங்களின் பெண்ணடிமைத்தனக் கருத்துக்களை நீக்கி புதிய கலாச்சாரம் படைக்க நாம் அனைவரும் இணைந்து உழைப்போம். ★

# சன்டினச புரட்சி - நிக்கரகுவா

எல்லா மத்திய அமெரிக்க நாடுகளைப் போலவும் நிக்கரகுவாவும் 1523 இல் ஸ்பானிய தளபதியான கோட்டஸ் என்பவனால் கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலனியாதிக்கப் போட்டிகளினால் நிக்கரகுவாவின் தலைவிதியை அந்நியர் நிர்ணயிப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

1522 இல் இந்தியரின் உரிமைக்காக போராடிய பிஷப்கசாஸ் என்பவர் நிக்கரகுவாவின் அன்றைய நிலையை இவ்வாறு விளக்குகிறார். ''இது ஒரு அழகிய பிரதேசமாகும் இதன் தட்டையான நிலப்பரப்பில் அடர்ந்த 'ஒச்சாட்' மரங்கள் நிறைந்திருக்கும். இம் மக்கள் ஆரோக்கியமானவர்கள் உற்சாகமானவர்கள். நட்புணர்வு உள்ளவர்கள் இவர்கள் தம் நிலத்தை இலகுவில் இழக்க விரும்பவில்லை. ஸ்பானியரின் கொடுமையைக் கூடியவரை பொறுத்தனர். ஸ்பானியர் தம் கொடுமைகளால் தினமும் பல உயிர்களைப் பலியாக்குகிறார்கள்.''

சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஸ்பானிய காலனியாதிக்கத்தின் கீழ் இருந்து பின்னர் 1821 இல் நிக்கரகுவா விடுதலை அடைந்தது. ஸ்பானியர் காலத்தில் நிலையூன்றிய நில பிரபுத்துவமும் சமூக அடிமை முறையும் சுதந்திரத்தின் பின்னரும் வளர்ந்து சென்றது. அரசியல் ரீதியாக லிபரல்; கன்சவேட்டிவ் என நாடு பிளவுண்டிருந்தது. இதனால் தொடர்ந்து பல காலமாக நாடு ஆட்சிச் சீர்குலைவுக்குள்ளாகி இருந்தது.

நிக்கரகுவாவின் புவியியல் அமைவு இராணுவ மேலாதிக்கத்தினை விரும்பும் வல்லரசுகளுக்கு வசதியாகவிருந்தது. வட, தென் அமெரிக்காக்களுக்கு இடைப்பட்ட சமுத்திரப் பிரதேசத்தில் நிக்கரகுவா அமைந்திருந்தமையினால் பல நாடுகள் அதனைப் பயன்படுத்த விரும்பின. நிக்கரகுவாவின் மேற்கு நோக்கிய கடற்கரை கரிபியன் தீவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வசதியாகவிருந்தது. அதன் நில அமைப்பும் ஏரிகளும் அத்திலாந்திக் பசுபிக் கால்வாய்களுக்கு ஏற்ற தளமாகவிருந்தது. இவ்வகையில் அமெரிக்காவின் நலன் நிக்கரகுவாவுடன் நேரடியாகத் தொடர்புற்றிருந்தது. நிக்கரகுவா 1906-ல் பிரிட்டனுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த முற்பட்ட போது அது அமெரிக்காவிற்குப் பிடிக்கவில்லை. [அப்போது பொன்ரோ கோட்பாடு அமுலில் இருந்தது] அமெரிக்கா நிக்கரகுவாவுடன் சம்பந்தப்பட ஆரம்பிக்க நிக்கரகுவாவில் அமெரிக்காவுக்கெதிரான கிளர்ச்சிகளும் ஆரம்பமாயின. 1912-ல் அமெரிக்க கடற்படை, கிளர்ச்சியொன்றை அடக்க அங்கு இறக்கப்பட்டது. அது 1925-ல் வாபஸ் பெறப்பட்ட இரு மாதங்களில் உருவான உள்நாட்டுப் போரினைத் தொடர்ந்து அமெரிக்கப்படை மீண்டும் நுழைந்தது. 1927-ல் அமெரிக்க சார்புடைய மொன்காடோ ஆட்சியில் அமர்த்தப்பட்ட போது சான்டினோ என்பவர் அதனை எதிர்த்தார். இவர் மொன்காடோவைத் துரோகி என வர்ணித்தார்.

இந்த சான்டினோ பற்றி நாம் சற்று அதிகம் தெரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது. நிக்கரகுவா இடது சாரிப் புரட்சியாளர் தம்மை சான்டினிஸ்டுகள் என்றே அழைத்துக் கொண்டனர். அவர்கள் அப்படி அழைப்பதற்கான வரலாற்றுப் பதிவுகளைச் சான்டினோ விட்டுச் சென்றதே காரணமாகும். 1898-ல் செல்வந்த இந்தியனுக்கும் ஏழைக் கூலிப் பெண் ஒருத்திக்கும் முறை கேடாகப் பிறந்தவரே சான்டினோ இளமையில் மிகுந்த துன்பங்களை அனுபவித்த சான்டினோ பல தொழில்களைச் செய்தான் மெக்சிக்கோவில் மெக்கானிக்காக வேலை செய்தபோது சித்தாந்த அறிவைப்பெற்ற சான்டினோ 1926-ல் நாடு திரும்பினான். அப்போது ஆட்சியிலிருந்த கன்சவேட்டிவ் ஆட்சித் தலைவனான கமா

றேவுக்கு எதிராக லிபரல் கிளர்ச்சியாளருடன் இணைந்து கொண்டான். பின் அவன் தன் சொந்தப் பணத்தைக் கொண்டு படையொன்றை நிறுவினான். முன்னூறு வீரர்களைக் கொண்ட இவனது எதிர்ப்பியக்கத்தினால் மொன்காடோ பதவியிழந்தான். ஆயினும் அமெரிக்க படைகள் வெளியேறும் வரையும் சான்டினோ சளையாமல் கெரில்லா நடவடிக்கைகளில் இறங்கினான். சான்டினோ தனித்து இராணுவ நடவடிக்கையில் மட்டும் இறங்காமல் சமூகப் பிரச்சினைகளுடனும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான் சான்டினோவின் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கெதிரான இப் போராட்டம் உலகம் முழுவதும் பேசப்படும் ஒன்றாயிற்று. இறுதியாக அமெரிக்கப் படைகள் வெளியேறின. இதனைத் தொடர்ந்து சான்டினோ இயக்கத்துள் உட்பூசல்கள் வெளிக்கிளம்பின. இதன் காரணமாக சான்டினோ ஆயுதத்தைக் கீழே போடவேண்டியவனானான். அமெரிக்க படை வெளியேற்றத்தைத் தொடர்ந்து சாக்கசா என்பவர் ஜனாதிபதி ஆனார். இவர் பதவிக் காலத்தில் சோமோசா காசியா தேசியப்படைகளின் தளபதியாக இருந்தார். சாக்கசாவிற்கும் சோமோசாவிற்கும் இடையே எழுந்த அதிகாரப் போட்டியால் சாக்கசா சான்டினோவைப் பயன்படுத்த எண்ணினார். இதனை அறிந்த சோமோசா 1934 - 2 - 21 -ல் சான்டினோவைத் தன் தேசியப்படை மூலம் சுட்டுக் கொன்றான். தலைவனை இழந்த சான்டினோவின் படை சிதறுண்டது. இறுதியாக சோமோசா 1936-ல் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். சோமோசா காசியாவினைத் தொடர்ந்து அவனது பரம்பரை நிக்கரகுவாவில் சுமார் 45 ஆண்டுகள் சீர்கெட்ட ஆட்சியை நடத்தியது.

சோமோசா காசியாவின் இளமை மிகக் கேவலமானது. அவன் கள்ள நோட்டு அடிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தான். சோமோசா நிக்கரகுவாவில் செல்வாக்குள்ள சாகசா குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை மணமுடித்தமை அவனது அதிஷ்டமே. 1926-ல் நடந்த கிளர்ச்சியில் இவன் சான் கார்லோஸ் என்ற நகரத்தைக் கைப்பற்றி அதன் ஜெனரல் ஆனான். படிப்படியாக அமெரிக்க நல்லெண்ணத்தைப் பெற்று 1933-ல் ஜனாதிபதி சாக்கசாவின் விருப்பத்திற்கு மாறாகத் தேசியப்படைகளின் தளபதி ஆனான். 1936-ல் பல தந்திரங்கள் மூலம் ஜனாதிபதி ஆகி நாட்டைச் சூறையாட ஆரம்பித்து 20 வருடங்களின் பின் மத்திய அமெரிக்காவிலேயே மிகப் பெரும் செல்வன் ஆனான். விபச்சாரம் சூதாட்டம் போன்றவற்றை நடத்தும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குச் சலுகைகளை வழங்குவதற்கு 'ஜனாதிபதி ஆணைக்குழுவை' நியமித்துப் பணம் பெற்றான். திறை சேரியிலிருந்து நேரடியாகவே பணம் பெற்றான். பொதுச் சேவைகளை இலவசமாகப் பயன் படுத்தினான். பற்றாக்குறைப் பொருட்களை அபகரித்தான். இவ்வாறு பல மார்க்கங்களில் நாட்டைச் சூறையாடினான். இவனைப் போலவே இவனைத் தொடர்ந்து வந்த சோமோசாக்களும் நாட்டைக் கொள்ளையடித்தனர் 1940 களில் 10 மில் டொலர் ஆகவிருந்த சோமோசா குடும்பத்தின் சொத்துக்கள் 1979-ல் 150 மில். டொலர் ஆக அதிகரித்திருந்தது.

முதலாளித்துவத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும் ஏக பிரதிநிதியான சோமோசாவின் சீரழிவு வேலைகள் சகல சமூக மட்டங்களிலும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் தோற்றுவித்தன. லத்தின் அமெரிக்காவிற்கே இயல்பான குணாம்சமான இரகசிய தலைமறைவு இயக்கம் தோற்றம் பெற்று சில அதிருப்திகளையும் எதிர்ப்புகளையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்றது. 1961-ல் ஹொன்ரோசில் கார்லோஸ் பொன்சேகா, சில்வியா மாயோகா, தொமஸ் போஜ் ஆகியோரால் நிக்கரகுவாவின் புரட்சி இயக்கமான FSLN தோற்றம் பெற்றது. 1930 களில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரனாக மடிந்த சான்டினோவின் பெயரைத் தம்முடன் இணைத்துக் கொண்ட சன்டினிஸ்ட் இயக்கம் 1963-ல் அடைந்த இராணுவத் தோல்விக்குப் பின்னர் ஓரளவு சட்டத்திற்குட்பட்ட அரசியற் கிளர்ச்சிகளை நகர்ப்புறங்களில் மேற்கொண்டது. 1967-ல் இரண்டாவது தடவையாக அடைந்த தோல்வியை அடுத்து FSLN மலைப்பகுதிகளுக்குப் பின்வாங்கியது

## நெருக்கடிகளின் ஆரம்பம்

1970 களில் நிக்கரகுவா சமூகத்தின் அக முரண்பாடுகள் மோசமடைந்தன.

1970-இல் 1.7 வீதமாக இருந்த பணவீக்கம் 1977 இல் 11 வீதமாக அதிகரித்தது. கடுமையான வேலைநிறுத்தம் நிலவியதால் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தேசியக் கடன் என்றுமில்லாத உச்சக் கட்டத்தை அடைந்தது. 1972 இல் தலைநகரான மனாகுவாவில் நிகழ்ந்த பூகம்ப நிவாரணத்திற்குசோமோசா பொறுப்பாக இருந்து அதனையும் சூறையாடினான். இதனால் பூர்ஷுவா கட்சியினரும் தம் சந்ததியினரை ஒன்று திரட்ட முற்பட்டனர் இவ்வகையில் UDEL (Democratic Liberation Union)இன் தோற்றம் குறிப்பிடத்தக்கது. மக்கள் ஆதரவு பெற்ற பூர்ஷுவா வர்க்க எதிரணியான UDEL யாப்பு அரசியல் தொழிற் சங்க உரிமைகளைக் கோரி ஆளும் வர்க்கத்தில் பிளவு உண்டாக்கி சர்வாதிகார ஆளும் வர்க்கத்தின் சமூக அடித்தளத்தை குறுக்கிப் பலவீனப்படுத்தும் அளவில் வெற்றி கண்டது.

நகர்புற கெரில்லாப் பாணியில் தாக்குதல்களை வடிவமைத்துக் கொண்ட FSLN 1974 டிசம்பரில் ஆட்சிப் பீடத்தில் இருந்த பல முக்கியஸ்தர்களைப் பணயக் கைதிகளாக்கியது. இது பல அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் அதிகார துஷ்பிரயோகத்தை கண்டிக்கும் அறிக்கையொன்றின் வெளியீட்டிற்கும் காரணமாக அமைந்தது. 1977 செப்டெம்பரில் வாஷிங்டனின் கோரிக்கைக்கு இணங்க அவசர நிலை நீடிக்கப்பட்டதுடன் FSLN தன் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. FSLN ன் தேசியப்படைகளின் மீதான தாக்குதல் இராணுவ ரீதியான வெற்றி வாய்ப்பினை அளிக்காவிட்டாலும் அரசியல் ரீதியாக மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. அடக்குமுறை எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை என்பதன் மூலம் ஆட்சிக்கெதிரான வெகுஜன எதிர்ப்பைக் கிளப்பி விட்டது. நவம்பரில் பொருளாதாரம்,கலாச்சாரம், சமயம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பன்னிருவர் குழு ஒன்று சர்வாதிகார ஆட்சிக்குப் பதில் ஜனநாயக ஆட்சி வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது. மாற்று ஆட்சியில் FSLN ம் இடம் பெற வேண்டும் என்றது. எதிரணியினரின் இந்நடவடிக்கைகளுக்குச் சோமோசா சற்றும் அசைந்து கொடுக்காமல் தன் பிடியை மேலும் இறுக்கினான். 1978 ஜனவரியத்தில் UDEL தலைவரான Pedro Joaguin Chamorro மனாகுவாவில் வைத்து சோமோசாவினால் கொலை செய்யப்பட்டார்.

## புரட்சி நெருக்கடிகள்

சமரோவின் கொலை புரட்சிக் கனலை மூட்டிவிட்டது. பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூடுதலாகப் பங்கேற்கத் தொடங்க அதிகாரம் புரட்சிகர FSLN இடம் கைமாறியது. சமரோவின் கொலையினால் மக்கள் ஆத்திரமடைந்த போது அதைப் பயன்படுத்தி FSLN தன் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. Rivas, Granada என்ற இடங்களிருந்த இராணுவத் தளங்களைப் பெப்ரவரி 1-ம், 2-ம் திகதிகளில் தாக்கினார்கள். FSLN ன் இராணுவ வெற்றிகளும் மக்களின் அணிதிரளலும் இணைந்து FSLN பக்கம் மக்களின் ஆதரவைப் பெருக்கியது. இந்நிலையில் சோமோசா சில சமரசங்களைச் செய்து கொள்ள முனைந்த போதும் நாட்டின் பொருளாதார நிலைமை அதற்கு இடம் தரவில்லை. அந்நியச்செலாவணி இழப்பு 315மில். ஆகவிருந்தது. பணவீக்கம் 75 வீதமாக இருந்தது. வேலையின்மை உழைப்பாளர்களில் 42 வீதத்தைப் பாதித்தது. புரட்சிச் சூழலின் தன்மைக்கு ஏற்ப அரசியல் வளர்ச்சி பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பொருளாதார வீழ்ச்சி அரசியல் வளர்ச்சியை ஏற்படுத்தியது.

தாராள பூர்ஷ்வாக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட சோமோசா தேசியப் படைகள் தனக்கு ஆதரவாக இருக்கும் வரை தன்னை ஒன்றும் செய்யமுடியாது என எண்ணினான். பொது வேலை நிறுத்தங்கள் வீதி ஆர்ப்பாட்டங்கள் எதுவுமே பெரிய அளவில் இடம்பெற்றாலும் எதிரி பலாத்கார மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் போது அவனைத் தூக்கி எறிய முடியாது என்பது வெளியாகியது. ஆக ஆயுதப் போராட்டம் ஒன்றே 'தேசியப் படைகளை எதிர்ப்பதற்கான ஒரே வழியாகும் என FSLN உறுதியாகச் சிந்தித்தது.

வடமேற்குப் பகுதியில் பிரச்சினை முற்றி வெடிக்கும் நிலையில் இருப்பதைக் கண்ட FSLN அதற்குத் தலைமை தாங்கத் தீர்மானித்தது. 1978 செப்டம்பர் 9-இல் அங்கி

ருந்த பல நகரங்களில் தேசிய படையினரைத் தாக்கினர். பொதுமக்களையும் கிளர்ச்சிக்குத் தூண்டினர். இதனால் இந் நகரங்களில் தேசியப்படை குண்டு வீசி இந் நகரைத் தாக்கினர். மொத்தத்தில் 6000 பேர் உயிரிழந்தனர். செப 20 இல் சண்டினிஸ்டுகள் பின் வாங்கினர். இத் தோல்வி அந்தளவு பெரிய தாக்கமாக இருக்கவில்லை என்பதிலிருந்து எந்தளவு எதிர்ப்புணர்ச்சி வளர்ந்துவிட்டது என்பதனை அறியமுடியும் இதனை அடுத்து அமெரிக்கா, கௌத்தமாலா, டொமினிகன் குடியரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய சமரச ஆணைக்குழுமுன் நிலையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. பேச்சுவார்த்தையின் நோக்கம் சோமோசா இல்லாமலேயே சோமோசாயிசத்தை நிலைநாட்டுவதே, FSLN எவ்வித இணக்கத்திற்கும் உடன்படவில்லை.

1979 ஜனவரி 10 இல் கமரோ படுகொலையின் ஓராண்டு பூர்த்தி நினைவாக ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் மனாகுவாவில் நடந்தது. இதில் பலர் கொல்லப்பட்டனர். தேசியளவில் எதிர்ப்பு வலுப்பெற்றமையால் பூர்ஷுவா இயக்கங்கள் உட்பட பன்னிருவர் குழு மாணவர் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் போன்ற 22 இயக்கங்கள் உள்ளடக்கிய National Patriotic Front (FPN) என்ற ஒன்றியம் உருவாகி சன்டினிஸ்ட் தலைமையின் கீழ் பொது வேலை நிறுத்தங்களை நிர்வகித்தது. சோமோசாவிற்கு ஆஜென்தீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுத உதவி தொடர்ந்தும் கிடைத்து வந்தது. ஆயினும் அவன் தனிமைப்படுத்தப்பட்டான். கொஸ்டாரிக்கா, பனாமா, மெக்சிக்கோ, வெனிசுலா ஆகியன நிக்கரகுவாவிற்கு எதிர்ப்பைக் காட்டத் தொடங்கின. அமெரிக்க ராச்சியங்களின் அமைப்பு சோமோசா நீக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

FSLNஉம் தாக்குதலை முடுக்கி விட்டது விபட்டுமிய அனுபவங்களைக் கொண்டு FSLN தன் படைகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து பல இடங்களிலும் நிறுவியது. வேலை நிறுத்தங்கள், பிராந்திய கிளர்ச்சிகள், தனது படைகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை எண்ணிறைந்த பிராந்தியங்களில் ஏற்படுத்துவதே FSLN தந்திரோபாயமாக இருந்தது. 132,000 சதுர கி. மீ. விஸ்தீரணமும், 2,300,000 குடிகளும் கொண்ட நாட்டை 15,000 வீரர்களைக் கொண்ட படைகளும் தாக்குதலில் இறங்கினால் அவர்கள் முறியடிக்கப்படுவது திண்ணம். மாறாகத் தாக்குதலை ஒரு முகப்படுத்தினால் மற்ற இடங்களை FSLN கைப்பற்றுவது சுலபம். இத்தந்திரோபாயம் FSLNக்கு வெற்றியளித்தது.

ஜூன் 4-இல் FSLN பொது வேலை நிறுத்தத்திற்கான அழைப்பைவிடுத்தது. அடுத்த நாள் நாடு முற்றாகச் செயலிழந்தது. ஒன்றின் பின் ஒன்றாக முக்கிய நகரங்கள் கிளர்ச்சிக்கான கட்டளையைப் பெற்றன. ஜூன் 10-ம் திகதி மனாகுவா வாசிகள் சண்டினிஸ்ட் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகவே தம்மிச்சையாகக் கிளர்ந்தெழுந்தனர். அரச படைகள் தலைநகரை நோக்கிப் பின் வாங்க நேரிட்டது. ஜூன் 14-ல் சாங்யோசிலுள்ள கோஸ்டாரிக்கா என்ற நகரில் ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இவ் அரசாங்கத்தின பெரும்பான்மை பலத்தை FSLN பெற்றது. சமாதானப் படையை அனுப்பும் சைரஸ்வான்ஸ் (அமெரிக்க ராஜாங்க அமைச்சர்) ன் திட்டமும் கைவிடப்பட்டது. அமெரிக்க ராச்சியங்களின் அமைப்பு அமெரிக்காவின் எவ்வித தலையீடும் இருக்கக்கூடாது என அறிவித்தது. ஏற்பட்டு வரும் சர்வதேச நிலைமைகளை அவதானித்த சோமோசா பிரச்சனைகள் முற்றிவிட்டதை உணர்ந்தான்.

ஜூன் 16-ம் திகதி நாட்டின் முக்கிய நகரங்கள் FSLN இன் கட்டுபாட்டின் கீழ் வந்தன. 19-ம் திகதி அனஸ்டாசியோ சோமாசாடிபெய்ல் நாட்டை விட்டு ஓடினான். தேசியப் படையானது சோமோசா தப்பி ஓடியதும் சீர்குலைய லாயிற்று. பல வர்க்கப் போராட்டங்களின் நெருக்கடிகளிலும் உடையாத இப் படை அதன் தலைவனின் வீழ்ச்சியோடு உடையத் தொடங்கியது FSLN உடனடியாக இறுதித் தாக்குதலை நடத்துவதற்கான அழைப்பைவிடுத்தது. ஜூன்

19-ம் திகதி சன்டினிஸ்ட் படைகள் வெற்றிகரமாக மனகுவா நகருள் பிரவேசித்தன. தேசியப் படை சிதறுண்டது, 7,000 வீரர் கைதிகளாக்கப்பட்டனர். மற்றவர் ஹொன்ரோசிற்குத் தப்பி ஓட முயற்சித்தனர். மக்களின் பழி வாங்கலுக்குப் பயந்த எல்லா அதிகாரிகளும் மனகுவாவை விட்டு வெளியேறினர். FSLN முழுமையாக வெற்றியீட்டிக் கொண்டது. ஆனல் 50,000 உயிர்கள் பலியானதோடு (சனத் தொகையில் 2 வீதம்) அளப்பரிய இழப்புகளும் ஏற்பட்டன. ஏனெனில் நாட்டின் தொழிற்சாலைகள் யாவற்றையும் சோமோசா குண்டு வீசித் தகர்த்திருந்தான் இறுதியாக 1979 ஜுன் 19-ல் FLSN-ன் Junta ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றது.

★ ★ ★

## ஸ்ரீமாவோக்கு குடி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வைப்பதற்கான நிலைமையினை உருவாக்கியுள்ளார். இதனூடாக குடியுரிமையற்ற நிலையில் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வது சாத்தியமற்றது எனக் கூறி இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒதுங்கி நின்ற ஸ்ரீமாவோ அரங்கிற்கு இழுக்கப்பட்டு இனப்பிரச்சினை பற்றிய தீர்வுகுறித்து தனது கருத்தினை வெளியிட வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டார். ஸ்ரீமாவோவும் இந்தியாவுடன் இணைந்து அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா எதிர்பார்க்கும் அளவிற்கு ஒத்துழைக்க மாட்டார் என்பதனை இந்தியாவுக்கு உணர்த்தி ஸ்ரீமாவோவை அம்பலப்படுத்துவதன் மூலம் இந்தியாவிற்கு அரசியல் காய் நகர்த்தும். எண்ணம் ஏற்படாது தடுத்தல் என்பது J,R, ஸ்ரீமாவோவுக்கு குடியுரிமை வழங்கியதற்கான இரண்டாவது காரணமாக அமையலாம்.

இலங்கையில் தற்போதைய அரசியலமைப்பின்படி இரண்டு கட்சிகள் ஒரே சமயத்தில் ஆட்சியில் பங்கெடுக்க முடியும் தற்போதைய சூழ் நிலைகளில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் வைக்கப்படுமானல் S.L.F.P குறைந்தளவு பெரும்பான்மையுடனாவது பாராளுமன்றத்தை தன் வசப்படுத்தக் கூடிய நிலமைகளே கூடுதலாகக் காணப்படுகின்றன. இதனூடாக இரண்டு பிரதான கட்சிகளும் ஆட்சியில் பங்கெடுக்க முடிகிறது. அதாவது நிர்வாகப் பொறுப்பு U.N.P யிடமும் சட்டத்தை ஆக்குதல் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான S. L. F. P. யிடமும் கையளிக்கப்படும். இதனால் இனப் பிரச்சினைக்கான தீர்வினையும் இரு கட்சிகளும் இணைந்தே மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது இந்நிலைமை இனப்பிரச்சினையை ஆயுதமாகப் பயன்படுத்தி ஆட்சிப் பீடமேறும் எதிர்க்கட்சியினரின் நடைமுறையினைச் சிக்கலாக்குகிறது. அதே சமயம் சகல அதிகாரங்களும் ஜனதிபதியிடமே இருப்பதனல் J.R யைப் பொறுத்த வரை இந்நிலை சாதகமானது. ஸ்ரீமாவோவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதன் பின்னணி இதுவாக இருக்கலாம் என்பதற்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. எது எவ்வாறுக இருந்த போதிலும் ஸ்ரீமாவோவுக்கு குடியுரிமை வழங்கியதனூடாக J.R தன்னைப் பலப் படுத்தியுள்ளார் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

★ ★ ★

### பிழை திருத்தம்

5-ம் பக்கத்தில் ''தமிழீழம் தனிப் பிராந்தியமாக'' என அச்சாகியுள்ளதை''தமிழீழம் தளப்பிராந்தியமாக'' எனவும் சில பிரதிகளில் 12-ம் பக்கத்தில் ''Jaffna Centrd and'' என அச்சாகியுள்ளதை ''Jaffna Centr cand'' எனவும் திருத்தி வாசிக்கவும்.

# NEW MASTER INSTITUTE
## B. M. C LANE
## JAFFNA

க. பொ. த. உயர்தரம்

**G. C. E A/L**

★ கலை

★ வர்த்தகம்

★ விஞ்ஞானம்

வகுப்புக்கள்

யாழ்நகரில் பிரபல்யமான ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன.

## நியூ மாஸ்ரர் இன்ஸ்ரிரியூட்

மணிக்கூட்டு கோபுரவீதி [B. M. C LANE]

யாழ்ப்பாணம்